RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE BUYING · SELLING · LEASE · PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 30, 15 செப்டம்பர் 2023 இதழ்:- 18

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

## பொறுப்புக்கூறல் - நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கை அவசியமென ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச நாடுகள்

இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறலையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.(3ம் பக்கம்)



ஈழநாடு மின்னிதழ்
eelanadu.ca

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd, Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

## சனல் 4 வெளியிட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் குறித்து தேவைப்பட்டால் மாத்திரமே சர்வதேச விசாரணை - பிரதமர்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய முதலில் உள்ளக விசாரணை நடைபெறவுள்ளது. குற்றவாளிகள் எவராக இருப்பினும் அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். இந்த விவகாரம் தொடர்பில் தேவையேற்பட்டால் மாத்திரமே சர்வதேச விசாரணை தொடர்பில் ஆராயப்படும் என்றும் அவர் குறிப்



GT Brokers Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances,
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

இவர்களுக்காக வாருங்கள்!
விபரங்கள் 12,13ம் பக்கம்

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED



## ஈஸ்டர் தாக்குதல்:- சனல் 4 ஆவணப் படத்திற்கு

### தகவல் வழங்கிய ஆசாத் மௌலானா யார்?

இலங்கையின் அம்பாறை மாவட்டம் மருதமுனையைச் சேர்ந்தவர் ஆசாத் மௌலானா. இவரது நிஜப் பெயர் முகமது ஹன்ஸீர். 2004 ஆம் ஆண்டு புலிகளின் முன்னாள் தளபதி கருணா அம்மான், பிள்ளையான் குழுவினருடன் இவர் இணைந்து (5ம் பக்கம் பார்க்க)

உங்கள் உறவுகள் எங்களால் இணைகிறது
15 வருடங்களுக்கு மேலாக உங்களோடு நாங்கள்
24/7 365
AERO COURIER
Fast & Secure World Wide Service
416.292.0444
151 Nashdene Rd, Unit 01, Scarborough ON, M1V 4C4

போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்!
உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

"ஒரு முகவர் இரு சேவைகள்"
"One Broker Two Services"
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

THINKING OF
**SELLING OR BUYING A HOME?**

**www.AgentSiva.com**
*Your neighborhood sales representatives*



**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

**Team SIVA**
WILL BRING THE BEST RESULTS!

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com




20 Years Real Estate Experience


**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply


HOMELIFE HIGHER STANDARDS


**Bus: 416.298.3200**
11 Progress Avenue, Suite 200, Toronto, ON. M1P 4S7
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY**

**Simcoe St N & Conlin Rd**

**Oshawa** **$314,900**
Bachelor/Studio: 1 Washrooms: 1
Condo Steps To The University


**Tecumesh Rd E & Hall Ave**

**Windsor** **$349,000**
Bedrooms: 3+3 Washrooms: 4
Perfect For Investors


**Markham & Eglinton**

**Scarborough** **$529,900**
Bedrooms: 2 Washrooms: 2
Location!! Location!! Location!


**Dundas/Hurontario St**

**Mississauga** **$599,000**
Bedrooms: 3 Washrooms: 2
High Demand Layout Within Building


**Bramalea Rd & Queen St**

**Brampton** **$590,000**
Bedrooms: 3+1 Washrooms: 2
Finished Basement

**Lawrence & Morningside**

**Scarborough** **$629,900**
Bedrooms: 3 Washrooms: 1
Townhouse W/Large living area

**York St / Bremmer Blvd**

**Toronto** **$610,000**
Bedrooms: 1+1 Washrooms: 1
Easy Access To Union Station

**Markham Rd & Denison**

**Markham** **$635,999**
Bedrooms: 1+1 Washrooms: 1
Low Maintenance Fees.


**Taunton & Ritson**

**Oshawa** **$699,000**
Bedrooms: 3+1 Washrooms: 3
Upgraded floors throughout the home

**Main St. E & Russell St.**

**Southgate** **$999,000**
Bedrooms: 4 Washrooms: 3
3063 Sq Ft Bright & Spacious Home

**Meadowvale & 401**

**Scarborough** **$995,000**
Bedrooms: 3+2 Washrooms: 2
Brand New Entertainment Enclosure

**Brimley Rd / St. Clair Ave**

**Scarborough** **$1,224,900**
Bedrooms: 3+1 Washrooms: 4
All Renovated Washrooms

**Meadowvale / 401**


**Scarborough** **$1,799,995**
Bedrooms: 4+3 Washrooms: 5
Extensively Renovated

**Bayview & Major Mac**

**Richmond Hill** **$1,499,900**
Bedrooms: 3+1 Washrooms: 4
Lots Of Upgrades!

**9th Line/14th Ave**

**Markham** **$1,799,000**
Bedrooms: 4+1 Washrooms: 4
Newly Renovated Luxury Home

**Commercial/Retail**


**Grey Highlands** **$7,200,000**
Dollarama And Tim Hortons.
Newly Built Tim Hortons Building

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

EELANADU
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனை த்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# பொறுப்புக்கூறல் - நல்லிணக்கத்தை உறுதிப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கை அவசியமென ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச நாடுகள்



இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறலையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன் னெடுக்க வேண்டுமென ஐக்கிய நாடு கள் மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத் தொடர் கடந்த 11 செப் 2023 திங்கட் கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. இங்கு ஐ.நா மனித உரிமைகள் பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல்-நஷீஃப்பின் உரையாற்றுகையில் இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட பத்து பேரின் விபரங்களை தருமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவ லகத்திடம் பல நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன என தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடு களின் தீர்மானங்களை நிராகரித்து ள்ளதை சுட்டிக் காட்டியுள்ள அவர் உரிய தகவல்கள் ஆதாரங்களை வழங் குவதற்காகவும் உரிய நீதித்துறை மற்றும் ஏனைய செயற்பாடுகளிற்கு ஆதரவை வழங்குவதற்காகவும் தனது அலுவலகம் ஆதாரங்கள் தகவல்களை சேகரிக்கும் பாதுகாக்கும் ஆராயும் நோக்கில் பொறுப்புக்கூறல் திட்டத்தை ஆரம்பித்துள்ளது என குறிப்பிட்டு ள்ளார்.

தனது திட்டத்திடமிருந்து தகுதி வாய்ந்த அதிகாரிகள் அதிகளவில் வேண்டுகோள்களை விடுக்கின்றனர் குறிப்பாக பத்துபேர் குறித்த விபரங் களை கோருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அவரது உரையைத் தொடர்ந்து ஏனைய நாடுகளின் பிரதி நிதிகள் இலங்கையின் மனித உரிமை கள் நிலைவரம் தொடர்பில் உரையாற் றினர்.

அதன்படி ஐரோப்பிய ஒன்றிய நாடு களின் சார்பில் பேரவையில் உரை யாற்றிய பிரதிநிதி, அமைதியான முறை யில் போராட்டங்களில் ஈடுபடுவதற்கும், ஒன்று கூடுவதற்குமான பொதுமக்க ளின் உரிமைக்கு இலங்கை அரசாங் கம் மதிப்பளிக்க வேண்டும் என வலியுறுத்தினார். அதே போன்று வலிந்து காணாமலா க்கப்பட்டோரின் உறவினர்கள் நீண்ட காலமாக உண்மை மற்றும் நீதிக்காகக் காத்தி ருப்பதாக சுட்டிக் காட்டிய அவர் மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்கும் அதே வேளை பொறுப்புக்கூறலையும் நல்லி ணக்கத்தையும் உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அர்த்தமுள்ள நடவடி க்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார்.

அதேவேளை அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, வட மெசிடோனியா, மாலாவி மற்றும் மொன்ரனேக்ரோ ஆகிய இணையனுசரனை நாடுகளின் சார்பில் உரையாற்றிய பிரிட்டன் பிரதிநிதி, இலங்கையில் அதிகாரப்பகிர்வு மற்றும் காணி விடுவிப்பு என்பன இன்னமும் கரிசனைக்குரிய பிரச்சினைகளாகக் காணப்படுவதாக சுட்டிக்காட்டினார்.

அத்தோடு கடந்தகால மீறல்கள் தொடர் பான பொறுப்புக்கூறல் மற்றும் நல்லி ணக்கம் என்பன இன்னமும் உறுதிப் படுத்தப்படவில்லை என்று தெரிவித்த அவர், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்று நிறுவப்படும் பட்சத்தில், பாதிக்கப்பட்டோர் உள்ளட ங்கலாக சகல தரப்பினரதும் நம்பிக் கையை வென்றெடுப்பதன் ஊடாக



மாத்திரமே அது வெற்றிகரமானதொரு பொறிமுறையாக இயங்கமுடியும் எனக் குறிப்பிட்டார்.

அர்த்தபூர்வமான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதை முன்னிறுத்தி, சகல தரப்பினருடனும் கலந்துரையாடி மனித உரிமைகளை மேம்படுத்துவ தற்கு அவசியமான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டுமென ஜப்பான் பிரதிநிதி வலி யுறுத்தினார்.

அது மாத்திரமன்றி உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளட ங்கலாக நிலை மாறுகால நீதியை உறுதிப்படுத்துவதற்குத் தாம் முழு மையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் உறுதி யளித்தார்.

மேலும் நியூஸிலாந்து, ஓமான், எகிப்து, லக்ஸம்பேர்க், ஜேர்மனி, பிரான்ஸ், இஸ் ரேல், துருக்கி, கியூபா ஆகிய நாடு களின் பிரதிநிதிகளும் இலங்கை தொடர்பில் பேரவையில் உரையாற்றி யமை குறிப்பிடத்தக்கது.

## கொக்குத்தொடுவாய் அகழ்வாய்வுப் பணி தொடர்பில் கனடா வலியுறுத்து!

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வாய்வுப் பணிகளை அரசாங்கம் உரிய முறையில் கையாள வேண்டும் என கனடா வலியுறுத்தி யுள்ளது. அகழ்வாய்வுப் பணிகள் தொடர்பான விசாரணைகள் நம்பத்தகுந்த வகையில் அமைய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் சமாதானம் மற்றும் சுதந்திரத்தை பேணுவது குறித்து கனடா, தொடர்ந்தும் கவனம் செலுத்தும் எனவும் ஐக்கிய நாடுகளுக்கான கனேடிய பிரதிநிதி குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, கருத்து சுதந்திரம், பொருளாதாரம், சமூக வலுவூ ட்டல், கலாசார உரிமைகள் என்பன சமமான முறையில் வழங்கப்பட வேண்டும் என்பதில் ஐரோப்பிய ஒன்றியம் உறுதியாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம், நல்லிணக்கத்தின் ஊடாகவும், தமிழ் அரசியல் கட்சிகளு டன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதன் ஊடாகவும் பிரச்சினைகள் தீர்க்கப் பட வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

அடக்குமுறைகள் மூலம் மக்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்படுவதை ஏற்க முடியாது என ஐரோப்பிய ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

இன்றைய அமர்வில் இலங்கை தொடர்பாக உரையாற்றிய பல நாடுகளின் பிரதி நிதிகள், இலங்கையில், பயங்கரவாத தடைச்சட்டம் அகற்றப்பட்டமையை வரவேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

Balachandran Law Office
Balachandran Muthaiah
Barrister, Solicitor & Notary
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

**Sri Vallipuranathar**

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: **416.439.0224,** Cell: **416.450.5011**

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com





ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

104 Rivalda Rd Northyork - On - M9M 2M8 (Weston/Sheppard)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin



ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 8.30 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்

அம்பாள் அடியார்களே!

எமது ஆலயம் புதிய முகவரிக்கு இடம் மாறியுள்ளது என்பதை அறியத் தருவதுடன் விரைவில் புதிய இடத்தில் அம்மனுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேவேளை நாளாந்தம் வழமை போன்று பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன என்பதை அம்பாள் அடியார்களுக்கு அறியத் தருவதுடன் அம்பாளின் திருப்பணிக்கு உங்களால் முடிந்தளவு பங்களிப்பைச் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

**இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்**

# கொக்குத்தொடுவாய் புதைகுழியில் இதுவரை 17 பேரின் எச்சங்கள் மீட்பு - கஜேந்திரகுமார் தகவல்!



பாதிக்கப்பட்ட மக்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் மனித புதைகுழி அகழ்வுப்பணி அமைய வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியில் கிட்டத் தட்ட 17 உடல்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிகமான உடல்கள் புதைக்கப்பட்டு இருக்கும் என்ற சந்தேகங்களும் இருப்பதாகவும் தெரிவித்துள் ளனர் என்றும் மேலும் மேலதிக வேலைகளை செய்வ தற்கு காலம் அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்

இந்த மனித புதைகுழிகளை பதிவு செய்வதும் ஆவணப்படுத்தப்படுவதும் மிகவும் முக்கியமான விடயம். குற்ற வழக்குகளிலே இவைகள் தான் சாட்சியம் இந்த சாட்சியங்களை பெற்று நீதிமன்றத் தின் முன்னிலையில் வைக்கின்ற வரையில் ஆவண ங்களில் ஒரு சிறிய தவறு ஏற்பட்டாலும் குற்றவாளி களை விடுதலை செய்வதற்கு மிகப் பெரியளவில் உதவுகின்ற விடயம் ஆகும்.

ஆகவே அனைத்து விடயங்களும் எந்த வித ஒளிவு மறைவு இல்லாமல் இந்த ஆவணப்படுத்தல் மிக முக்கியமானது என அனைவரும் எதிர்பார்க்கின் றோம். துரதிஸ்டவசமாக இன்று பார்த்தால் ஊடகங் களுக்கும் மனித புதைகுழி நடவடிக்கைகளின் போது அதை ஆவணப்படுத்துவதை தடை செய் யப்பட்டுள்ளது. வேலை தொடங்குவதற்கு முதலும் வேலை முடிகின்ற பொழுதும் அவர்கள் புகைப்படங்



களை எடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தவிர சாட்சியங்கள் சேகரிக்கும் முறைகள் சரியாக நடைபெறுகின்றதா இல்லையா என்பதை உலக மக்கள் அறிய அவற்றை ஆவணப்படுத்த ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த மனித புதைகுழிகள் கண்டறிந்த கால கட்டத் திலே கணிசமான ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலே ஊடகங்கள் செய்திகளை வெளிக் கொண்டு வந்தமையால் மேலோட்டமாக காட்டுகின்ற வகையில் எமக்கு தெரியக்கூடியதாக உள்ளது அது வும் மட்டுப்படுத்தும் வகையில் காட்டப்படுகின்றமை பலத்த ஏமாற்றத்தை கொடுக்கின்றதாக காணப்படு கின்றது

மேலும் இந்த அகழ்வுப்பணி ஆரம்பிக்கப்பட்டவுடன் பாதிக்கப்பட்ட தரப்புகள் ஏற்றுக் கொள்ளதக்கதாக ஆய்வுப்பணிகள் இடம்பெற வேண்டும். ஒரு சர்வ தேச விசாரணை மூலமாகத் தான் இந்த பிரச்ச னையை முடிவுக்கு கொண்டு வரலாம் என்கின்ற சூழ்நிலையிலே இவற்றை பார்வையிடும் போது அதிகாரிகள் 17 உடல்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக வும் மேலும் உடல்கள் இருக்கலாம் என்று சந்தே கித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்

# பௌத்த கொடியைப் பயன்படுத்த ராஜபக்ஷாக்களுக்கு உரிமையில்லை! குருந்தூர்மலை விவகாரத்தில் கை வைப்பதைத் தவிர்க்க வேண்டும்!



குருந்தூர் மலை விவகாரத்தில் கை வைத்து நாட்டில் மீண்டும் இன வாதத்தை தோற் றுவிப்பதை ராஜ பக்ஷர்கள் தவிர் த்துக் கொள்ள வேண்டும். தமிழ் தரப்பினருடன் பேச்சு வார்த்தை யில் ஈடுபட்டு சுமுகமாக இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண வேண் டும். பௌத்த கொடியை பயன்படுத்த ராஜபக்ஷர் களுக்கு தார்மீக உரிமை ஏதும் கிடையாது என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளு மன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். மஹரக பகுதியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

ராஜபக்ஷர்களுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் ஊழல் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படும் போது அவர்களது சகாக்கள் 'ராஜபக்ஷர்கள் 30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்ததால் சர்வதேச மட்டத்தில் நெருக்கடிக்குள்ளாக்கப்படுகிறார்கள்.

சிங்கள பௌத்த தலைவர்களை பாதுகாக்க வேண் டும் 'என குறிப்பிடுகிறார்கள். 2019 ஆம் ஆண்டும் ராஜபக்ஷர்கள் சிங்கள பௌத்த தலைவர்களாக சித்தரிக்கப்பட்டார்கள். இறுதியில் முழு நாடும் வங்கு ரோத்து நிலையடைந்தது.

நாட்டின் இறையாண்மை, புத்தசாசனம் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி ஆட்சிக்கு வந்த ராஜபக்ஷர்கள் உண்மையில் நாட்டின் இறையாண்மையையும், புத்தசாசனத்தையும் பாதுகாக்கவில்லை. தமது குடும்ப நலனுக்காக சர்வதேச மட்டத்தில் நாட்டின் இறையாண்மையை விட்டுக் கொடுத்தார்கள்.

வங்குரோத்து நிலையடைந்துள்ள நாட்டை மீட்ப தற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும் அதற்கான நடவடிக்கைகளை எதிர்வரும் நாட்களில் முன்னெடுப்போம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் மரபுரிமைகள் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகின்றன. ராஜ பக்ஷர்கள் தலையிட்டால் மாத்திரமே குருந்தூர் மலை விவகாரத்துக்கு ஒரு தீர்வு காண முடியும் என்ற நிலைப்பாட்டை தோற்றுவிக்க ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள்.

குருந்தூர் மலை விவகாரத்தில் கை வைத்து நாட்டில் மீண்டும் இனவாதத்தை தோற்றுவிப்பதை ராஜபக்ஷர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். குருந்தூர்மலை விவகாரம் குறித்து தமிழ் தலை மைகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு சுமுகமான தீர்வு காண வேண்டும்.பௌத்த கொடியை பயன் படுத்த ராஜபக்ஷர்களுக்கு தார்மீக உரிமை கிடை யாது என்றார்.

# இவர்களுக்காக....





என் இனிய கனடா வாழ் கருணையாளர்களே!

திக்குத் திசை தெரியாது போரின் பேரழிவின் போது சிக்கித் தவித்த 86 குழந்தைகளோடு 13 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லம். பாரதி இல்லக் குழந்தைகளுக்கு கடந்த 12 ஆண்டுகளாக உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகை ஊடாக கனடியத் தமிழ் சமூகம் ஆகிய நீங்கள் வழங்கி வருகின்ற மகத்தான ஆதரவினால் இன்று 436 குழந்தைகளின் நாளாந்த உணவுத் தேவைகளும் கல்வி மேம்பாடும் சிறப்பாக நடை பெற்று வருகின்றது.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சுமை காரணமாக பாரிய நெருக்கடியை எமது இல்லங்களும் எதிர் நோக்கியுள்ள நிலையில் அவர் களது இடர்களைக் களையவும் கல்வியை மேம் படுத்தவும் எதிர்வரும் 29 ஒக் 2023 ஞாயிற்றுக் கிழமை நடை பெற்றவுள்ள ஊட்டும் கரங்கள் நிகழ்வுக்கு வருகை தந்து உங்கள் ஆதரவைத் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன் (விபரங்கள் 12ம் 13ம் பக்கம் பார்க்க)

வெறுமனே களியாட்ட நிகழ்வுகளுக்கும் தனி மனித புகழ்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பங்களிப்பை நல்காது தேச விடுதலைப் போரின் போது உயிர்த் தியாகம் செய்தவர்களது குழந்தைகளை வாழ வைக்கும் பணியில் இணைந்து கொள்ளுங்கள்.

நீங்கள் வழங்குகின்ற ஒவ்வொரு டொலர்களும் அந்தக் குழந்தைகளின் வாழ்வுக்கு மிகப் பெரிய உதவியாக இருக்கும். நாம் வாழும் கனடிய மண் ணிலும் அனைத்துமே விலை யேற்றம் கண்டுள்ள மையால் எமது நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் தேச அபிமானிகள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின் றார்கள்.

விழாவில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்க ளால் முடிந்தளவு பங்களிப்பை எம்முடன் தொடர்பு கொண்டு வழங்குமாறும் உங்கள் பெயர், விபரங்கள் ஈழநாடு பத்திரிகையிலும் முகநூலிலும் தவறாது வெளிவரும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

எம் தேசத்தின் எதிர்காலச் சந்ததி எம் மண்ணில் நிம்மதியாக சிறப்பாக வாழ வழி சமைப்போம்! வாரீர்!

தொடர்புகளுக்கு ஈழநாடு பரமேஸ் 416 841 9600

ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம் கனடா

சொகுசு பஸ் மூலம் செப்டம்பர் 30, ஒக்டோபர் 01 திகதி களில் ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்மன் கோவில் (றொயஸ்ரர்) ஸ்ரீ வெங்கடேஸ்வரர் கோவில் (பிற்பேக்) இருநாள் யாத்திரை

மேலதிக விபரங்களுக்கு

ஸ்ரீ 647 534 5617 / 416 609 1484

# பொலிஸ், காணி அதிகாரம் குறித்து வீண் அச்சம் தேவையில்லை! முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவிப்பு!

மாகாணசபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரம் வழங்குவது தொடர்பில் வீண் அச்சம் கொள்ள வேண்டியதில்லை என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு இதுவே சிறந்த தருணமாகும். இதை விட நல்ல நேரம் கிடைக்கப் போவதில்லை. எனவே, வாய்ப்பை சரிவர பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் மாகாணசபைகளுக்கு பொலிஸ், காணி அதிகாரம் வழங்குவது தொடர்பில் வீண் அச்சம் கொள்ள வேண்டியதில்லை எனவும், மேற்படி அதிகாரங்களை வழங்கினால் நாடு பிரியும் என்ற வாதம் ஏற்புடையது அல்ல.

நாட்டில் போர் முடிவடைந்தாலும் போருக்கு வித்திட்ட பிரச்சினைக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை எனவும் அதற்கான ஆரம்பக்கட்ட முயற்சி கூட எடுக்கப்படவில்லை.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் அரசமைப்பில் உள்ள ஓர் அங்கம். அது சட்டப்பூர்வமானது, அதனை அமுல்படுத்துமாறே தமிழ்த் தலைவர்கள் கோருகின்றனர். இதனை ஏன் அமுல்படுத்த முடியாது?

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தும் நிலைப்பாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார். இது தொடர்பில் என்னுடனும் பேச்சு நடத்தினார். முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என நான் கூறினேன். ஆனால் நாட்டில் மாகாணசபைகள் இயங்கவில்லை. அதிகாரத்தை பகிர மாகாணசபை இருக்க வேண்டும். அப்படியானால் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இனப்பிரச்சினை விடயத்தில் அறகலய ஊடாகவும் பாரிய மாற்றம்



ஏற்பட்டுள்ளது. நல்லிணக்கம் பிறந்துள்ளது. அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து செயற்பட்டனர். இளைஞர், யுவதிகளின் ஒன்றிணைந்த செயற்பாடுகளை காணும்போது விழிநீர் வந்தது. இது சிறந்த தருணம். நான் ஜனாதிபதியாக இருந்திருந்தால் மறுநாளே இனப்பிரச்சினைக்கு தீர்வை முன்வைத்திருப்பேன். 13 சட்டத்தில் உள்ளது, அதனை அமுல்படுத்தினால் போதும், அதற்கு மாகாணசபைகள் இருக்க வேண்டும்.

13இல் பொலிஸ், காணி அதிகாரம் பற்றி தான் விமர்சனங்கள் எழுகின்றன. பொலிஸ் அதிகாரம் வழங்கினால் தனி நாடு உருவாக்கப்படும் எனவும் கூறுகின்றனர். முதலில் 13 இல் என்ன உள்ளது என்பதை படித்து அறியவும். பொலிஸ்மா அதிபர் தேசிய அரசால் நியமிக்கப்படுகின்றார்,

அவரால் தான் பிரதி பொலிஸ்மா அதிபர்கள் நியமிக்கப்படுகின்றனர், பொலிஸ்மா அதிபரின் கீழ் தான் இவர்கள் உள்ளனர். மாகாணத்தின் சட்டம், ஒழுங்கு தொடர்பில் இணைந்து செயற்பட வேண்டும். எஸ்.எஸ்.பியும் பொலிஸ்மா அதிபரால் தான் நியமிக்கப்பட வேண்டும். ஏ.எஸ்.பிக்கு கீழ் தான் மாகாணசபையால் நியமனம் வழங்க முடியும். இதனை செய்வதற்கு மாகாண பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதி வேண்டும்.

அந்த நியமனத்தில் அரசியல் தலையீடு இருக்காது. மேற்படி பொலிஸ் ஆணைக்குழுவில் மூவர் இடம் பெறுவர், ஒருவர் தான் பொலிஸ்மா அதிபரால் நியமிக்கப்படும் பிரதி பொலிஸ்மா அதிபர், மற்றையவர் அரச சேவை ஆணைக்குழு மற்றும் ஜனாதிபதியின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்படும் நபர், மூன்றாவது மாகாண முதல்வரின் பிரதிநிதி. எனவே, மூன்றிலிரண்டு அதிகாரம் மத்திய அரசிடம்தான் உள்ளது.

அடுத்தது மாகாண பொலிஸாருக்கான பயிற்சி கூட முழுமையாக மத்திய அரசால் தான் வழங்கப்படும். ஆயுத வழங்கலும் மத்திய அரசு வசம்தான் உள்ளது. அப்படியானால் பொலிஸ் அதிகாரத்தில் உள்ள அச்சம் என்ன? மாகாணசபை எல்லைமீறி செயற்பட்டால் முழு அதிகாரத்தையும் ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டின் கீழ் எடுக்கலாம். இராணுவத்தையும் அனுப்பலாம் எனவும் தெரிவித்தார்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குற்றவாளிகளுக்கு பாவமன்னிப்பு வழங்கத் தயாராகும் பேராயர் கர்தினால் ரஞ்சித் மல்கம்

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னணியில் உள்ள குற்றவாளிகள் பொறுப்பை ஏற்று மனந்திருந்தினால் அவர்களை மன்னிக்க முடியும் என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதே போன்று தென்னாப்பிரிக்காவில் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவைத் தொடர்ந்து இனக் கலவரத்தில் ஈடுபட்டவர்கள் வந்து தங்களின் தவறுகளுக்காக வருந்தினர்.


அப்போதைய தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலா அவர்கள் மனந் திருந்திய பிறகு தவறு செய்த அனைவரையும் மன்னித்தார். அது போன்றே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் ஈடுபட்டவர்களையும் மன்னிக்க தயார்.

இதன்படி உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்புத் தாக்குதலுக்கு காரணமானவர்கள் என்று குற்றம் சாட்டுபவர்கள் தாங்கள் வகிக்கும் பதவியை விட்டு விலகி நேர்மையை வெளிப்படுத்த வேண்டும்.

நேர்மை என்பது அரசியல்வாதிகளு



க்குப் பின்னால் ஒளிந்து கொள்ளாது. எனவே அவர்கள் உண்மையைத் தழுவ பயப்பட வேண்டாம் என்றும் கர்தினால் தெரிவித்துள்ளார்.



# ஈஸ்டர் தாக்குதல்:- சனல் 4 ஆவணப் படத்திற்கு தகவல் வழங்கிய ஆசாத் மௌலானா யார்?



இலங்கையின் அம்பாறை மாவட்டம் மருதமுனை.யைச் சேர்ந்தவர் ஆசாத் மௌலானா. இவரது நிஜப் பெயர் முகமது ஹன்ஸீர். 2004ஆம் ஆண்டு புலிகளின் முன்னாள் தளபதி கருணா அம்மான், பிள்ளையான் குழுவினருடன் இவர் இணைந்து இயங்கிய போது, 'ஆசாத் மௌலானா' என்கிற பெயரால் இவர் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டார்.

இந்தப் பெயரை ஏன் இவர் தேர்வு செய்தார் எனத் தெரியவில்லை. ஆனால் 'மௌலானா' எனும் பெயரோடு ஹன்ஸீருக்கு குடும்பத் தொடர்பு ஒன்று உள்ளது. இவரது பாட்டியின் (தந்தையின் தாய்) சகோதரர் பெயர் மசூர் மௌலானா. அவர் இலங்கை செனட் சபை உறுப்பினராகப் பதவி வகித்தார். இலங்கை அரசியலில் மிகவும் அறிப்பட்ட மசூர் மௌலானா 2015ஆம் ஆண்டு 84வது வயதில் காலமானார்.

ஆசாத் மௌலானா என்கிற ஹன்ஸீர் 1984ஆம் ஆண்டு அவரது பெற்றோருக்கு முதல் பிள்ளையாகப் பிறந்தார். க.பொ.த உயர்தரத்தில் (13ஆம் வகுப்பு) விஞ்ஞான பிரிவைக் கற்றவர். பின்னர் குண்டசாலையிலுள்ள இலங்கை விவசாயக் கல்லூரியில் சேர்ந்து படித்தார். ஆயினும் சில காரணங்களால் ஓராண்டு கழிந்த நிலையில் அந்தக் கல்லூரியிலிருந்து இடை விலகினார்.

அந்தக் காலப்பகுதில் தற்போதைய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈபிடிபி) தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவினுடைய சிபாரிசின் பேரில் அரச மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத் தலைவரின் பிரத்தியேக பணியாட்களில் ஒருவராக ஆசாத் மௌலானா நியமிக்கப்பட்டார். டக்ளஸ் தேவானந்தா அப்போது விவசாய அமைச்சராக பதவி வகித்தார். அவரின் கீழ்தான் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் இருந்தது.

அதன் தலைவராக குணசேகரம் சங்கர் என்பவர் பணியாற்றினார். அவர் பிற்காலத்தில் ஈபிடிபியின் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தார். டக்ளஸ் தேவானந்தா மற்றும் குணசேகரம் சங்கர் ஆகியோருக்கு நண்பராக இருந்தவர் ஆசாத் மௌலானா.வின் தந்தை. ஈபிடிபி இயக்கம் தொடங்கப்படுவதற்கு முன்னர், டக்ளஸ் மற்றும் சங்கர் போன்றோர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபிஆர்எல்எப்) எனும் இயக்கத்தில் இருந்தனர்.

அப்போது ஆசாத் மௌலானாவின் தந்தையும் அந்த இயக்கத்தில் ஒரு விடுதலைப் போராளியாக செயல்பட்டார். மௌலானாவின் தந்தை முகம்மட் மிஹ்ழார் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் தீவிர பங்காற்றி வந்தார். ஆசாத் மௌலானாவின் தந்தையின் பெயர் முகம்மட் மிஹ்ழார். அவர் ஆரம்பத்தில் ஜேவிபி (மக்கள் விடுதலை முன்னணி) இயக்கத்தில் சேர்ந்து செயற்பட்டார்.

பின்னர் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபிஆர்எல்எப்) எனும் தமிழர் போராட்ட இயக்கத்தில் இணைந்து, அதில் முக்கிய பொறுப்பும் வகித்தார். ஈபிஆர்எல்எ.ஃப் இயக்கத்தில் ஆசாத் மௌலானாவின் தந்தை 'கமலன்' எனும் பெயரால் அழைக்கப்பட்டார்.

இலங்கையில் 1987ஆம் ஆண்டு, இணைந்த வடகிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடைபெற்ற போது, ஆசாத் மௌலானாவின் தந்தை மிஹ்ழார், ஈபிஆர்எல்எப் சார்பாக அம்பாறை மாவட்டத்தில் 'மலர்' சின்னத்தில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

மௌலானாவின் தந்தை முகம்மட் மிஹ்ழார் 1990ஆம் ஆண்டு சென்னை கோடம்பாக்கத்தில் விடுதலை புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். சென்னையில் உள்ள கோடம்பாக்கத்தில், 1990ஆம் ஆண்டு ஜூன் 19ஆம் தேதி, ஸக்கரியா தெருவிலுள்ள ஒரு கட்டடத்தில் வைத்து, அப்போதைய ஈபிஆர்எல்எப் தலைவர் பத்மநபாவும் அவரது இயக்கத் தோழர்களுமாக 13 பேரை விடுதலைப் புலிகள் சுட்டுக் கொன்றனர். அதில், ஆசாத் மௌலானாவின் தந்தை மிஹ்ழாரும் மரணித்தார்.

இதையடுத்து அந்தத் தாக்குதலில் மரணித்த பத்மநபா உள்ளிட்டோரின் உடல்கள் ராஜாஜி மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. பின்னர், சென்னையிலுள்ள முஸ்லிம் மையவாடி ஒன்றில் மிஹ்ழாரின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.



ஆசாத் மௌலானா தந்தையை இழந்த போது அவருக்கு 6 வயது. விடுதலைப் புலிகளால் அவரின் தந்தை கொல்லப்பட்டதால், ஆசாத் மௌலானா இயல்பிலேயே 'புலிகள்' மீது கடுமையான கோபம் கொண்டவராக இருந்தார் என அவரின் உறவினர் ஒருவர் கூறுகிறார்.

ஆசாத் மௌலானா 2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் பாணந்துறையிலுள்ள தனது மாமியின் (தந்தையின் சகோதரி) மகளை திருமணம் செய்தார். அதில் அவருக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தனர். பின்னர் சாய்ந்தமருது பிரதேசத்தில் இன்னொரு பெண்ணையும் திருமணம் செய்தார். ஆனால், மிகக் குறுகிய காலத்திலேயே அந்தப் பெண்ணுடன் விவாகரத்தாகி விட்டது.

பிள்ளையான் தலைமையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பு இயங்கத் தொடங்கிய பின்னர், அதன் பேச்சாளராக ஆசாத் மௌலானா நீண்ட காலம் செயல்பட்டார். அதேவேளை பிள்ளையானின் நிதிப் பொறுப்பாளராகவும் கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக பிள்ளையான் பதவி வகித்த காலத்தில் அவரின் பிரத்தியேக செயலாளராகவும் ஆசாத் மௌலானா பணியாற்றினார். இவ்வாறு பிள்ளையானுடன் நீண்டகாலம் நெருக்கமாக இருந்து வந்த ஆசாத் மௌலானா, 2022ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து வெளியேறியதாகக் கூறப்படுகிறது.

தற்போது அவர் சுவிட்சர்லாந்தில் அல்லது ஐரோப்பிய நாடொன்றில் உள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. சேனல் 4 ஆவணப்படத்துக்கு முன்னர் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான முறைப்பாடு ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் ஆசாத் மௌலானா சமர்ப்பித்துள்ளார் எனவும் தெரிய வந்துள்ளது. -BBC

# கனடா நோக்கிய தமிழ் மக்களின் வெளியேற்றம்

ஒரு புறம் அரசியல் தீர்வு பற்றிய கற்பனைகள். மறு புறமோ நிலம் ஆக்கிரமிக்கப்படுகின்றது அதற்கு எதிராகப் போராட வேண்டுமென்னும் குரல்கள்.

அரசியல்வாதிகள் இவ்வாறு கூறிக் கொண்டிருக்கும் போது மறுபுறம் வாய்ப்புள்ள மக்களோ எவ்வாறு நாட்டை விட்டு வெளியேறலாமென்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர்.

கனடிய அரசாங்கம் தற்போது குடியேற்ற நடைமுறையில் சில தளர்வுகளை ஏற்படுத்தியிருக்கின்றது. இதனை ஓர் அரிய வாய்ப்பாகக் கருதும் தமிழ் மத்தியதர வர்க்கமோ குடும்பமாக வெளியேறுவதில் தீவிரம் காட்டி வருகின்றது. ஏற்கனவே, பெருமளவானவர்கள் வெளியேறி விட்டனர்.

கனடிய அரசாங்கத்தின் குடிவரவு கொள்கை ஆசியாவை அடிப்படையாகக் கொண்டது. இலங்கையைப் பொறுத்தவரையில், இந்த வாய்ப்பை அதிகம் ஈழத் தமிழர்களே பயன்படுத்தி வருகின்றனர்.

காரணம், ஏற்கனவே கனடாவில் உறவினர்களை கொண்டிருப்பவர்கள் மிகவும் இலகுவாக செல்வதற்கான வாய்ப்பை கனடா வழங்கியிருக்கின்றது. இன்னொரு புறமோ, இதனை ஒரு தொழிலாக முன்னெடுக்கும் போக்கும் அதிகரித்திருக்கின்றது.

அதாவது, கனடாவில் உள்ளவர்களின் ஆதரவுடன் அவர்களிடமிருந்து கடிதமொன்றை பெறும் முகவர்கள் பெருந்தொகை பணத்தை பெற்றுக் கொண்டு கனடாவுக்கு அனுப்பும் தொழிலை முன்னெடுத்து வருகின்றனர். இந்த விடயத்தை கனடிய தூதரகம் அறியாமலும் இருக்கலாம்.

உதாரணமாக கனடாவில் ஒரு வியாபார நிலையத்தை நடத்தி வருபவர் தனக்கான வேலையாட்களாக சிலரை அழைக்க முடியும். இதனைப் பயன்படுத்தும் முகவர்கள் குறித்த கனடிய நபருக்கு குறிப்பிட்டளவான பணத்தை வழங்குவதற்கு இணங்குவதன் மூலம் கனடாவின் குடியவரவு கொள்கையின் நெகிழ்ச்சியை நல்லதொரு வியாபாரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு ஒரே தடவையிலேயே கனடிய தூதரகம் கடவுச்சீட்டை வழங்குகின்றது. இது குடும்பமாக நாட்டை விட்டு வெளியேறுவதற்கான வாய்ப்பை வழங்குகின்றது.

வடக்கு கிழக்கிலிருந்து ஏராளமான குடும்பங்களும் தனிநபர்களும் கனடாவுக்குள் நுழைந்திருக்கின்றனர். பெரும்பாலானவர்கள் உல்லாசப் பயணர்களுக்கான கடவுச்சீட்டிலேயே செல்கின்றனர். ஆனால், அவ்வாறானர்கள் திரும்பி வரப்போவதில்லை.

இதனை கண்காணிப்பதற்கான பொறிமுறையையும் கனடிய அரசாங்கம் கொண்டிருக்கவில்லை. கனடா இந்த விடயத்தில் நெகிழ்வான கொள்கை நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றது.

அடுத்த ஆண்டும் 5 ஆயிரம் ஆசியர்களை அனுமதிக்கவுள்ளது. இதனையும் வடக்கு கிழக்கு தமிழர்களே அதிகம் பயன்படுத்தப் போகின்றனர். ஏற்கனவே, 12 இலட்சத்துக்கு மேற்பட்ட ஈழத் தமிழ் மக்கள் நாட்டை விட்டு வெளியேறி விட்டனர். அவர்களே தற்போது, கனடாவிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்கின்றனர்.

அவர்களின் உதவியுடன் தான் ஏனையவர்களும் தற்போது வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். இதன் மூலம், தாங்கள் வெளியேறியமை போன்று தங்களுடைய உறவினர்களையும் வெளியேற்றும் மகத்தான தேசிய பணியை புலம்பெயர் சமூகம் ஆற்றி வருகின்றது.

உண்மையில் ஒரு காலத்தில் புலம்பெயர்வு தமிழ் தேசியத்துக்கான பலமாக நோகப்பட்டது. ஆனால், தற்போது புலப்பெயர்வு தமிழ் மக்களின் இருப்பை சிதைக்கும் பணியையே திறம்பட செய்து வருகின்றது. வசதியுள்ள இடங்களைத் தேடி மக்கள் செல்வது இயல்பானது. ஆனால், அது தமிழ் சூழலை பொறுத்தவரையில் ஒரு பேராசையாக மாறிவிட்டது.

வசிதியுள்ளவர்கள் சிறந்த தொழில்களில் இருப்பவர்களும் கூட தற்போதைய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு வெளியேறுவதிலேயே குறியாக இருக்கின்றனர். இதற்கு பக்கபலமாக செயல்படும் வகையிலேயே சிலரின் அரசியல் செயல்பாடுகளும் அமைகின்றன. வடக்கு கிழக்கில் எப்போதும் ஏதாவதொரு பிரச்னை இருப்பதான தோற்றத்தைக் காண்பிக்கும் அரசியல் செயல்பாடுகளும் இவ்வாறான மக்கள் (22ம் பக்கம் பார்க்க)

# சனல் 4 வெளியிட்டுள்ள குற்றச் சாட்டுக்கள் குறித்து தேவைப்பட்டால் மாத்திரமே சர்வதேச விசாரணை -பிரதமர்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய முதலில் உள்ளக விசாரணை நடைபெறவுள்ளது. குற்றவாளிகள் எவராக இருப்பினும் அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்படும் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார். இந்த விவகாரம் தொடர்பில் தேவையேற்பட்டால் மாத்திரமே சர்வதேச விசாரணை தொடர்பில் ஆராயப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் தாக்குதலை முன் வைத்து அரசியல் நடத்த எவருக்கும் இடமளியோம் என்றும், ஆனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைத்தே தீரும் என்றும் பிரதமர் உறுதியளித்தார்.

இதேவேளை சனல் 4 தொலைக்காட்சி அண்மையில் ஒளிபரப்பிய சர்ச்சைக்குரிய ஆவண நிகழ்ச்சியின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழுவொன்றை நியமிக்கவுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் உண்மையைக் கண்டறியவும் நீதியை நிலைநாட்டவும் சாதகமான நடவடிக்கையாக ஜனாதிபதி இந்தக் குழுவை நியமிக்கவுள்ளார் என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

நாசகார ஈஸ்டர் குண்டுத் தாக்குதலின் பின்னணியில் பிரதான சூத்திரதாரி ஒருவர் இருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் இதே போன்ற குற்றச்சாட்டொன்றை முன் வைத்துள்ளார். எனவே



இந்த நிலைமை எரியும் நெருப்பில் வைக்கோல் சேர்ப்பது போன்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. இந்தப் பிரச்சினைகளை பரந்தளவில் கவனத்துக்குக் கொண்டு வந்து அவற்றை விரைவாகத் தீர்ப்பதற்காக, இந்தத் தூண்டுதல் ஏற்படுத்தும் கூற்றுக்களை விசாரிப்பதற்காக நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை அமைக்கவும் அரசு உத்தேசித்துள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலைமையின் தீவிரத் தன்மைக்கு ஏற்ப தற்போது முன் வைக்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களையும் விரிவாக மீளாய்வு செய்ய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கை மற்றும் ஜனாதிபதி ஆணைக் குழு அறிக்கைக்கு மேலதிகமாக, எதிர்காலத்தில் வெளியிடப்படவுள்ள இந்த இரண்டு அறிக்கைகளும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.' என்றும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# வவுனியாவில் திருவிழாவுக்கு மதுப்போத்தல் மாவாவுடன் பூசை செய்ய வந்த குருக்கள்!

வவுனியா பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் உள்ள ஆலயம் ஒன்றின் மகோற்சவத்தின் போது குருக்கள் ஒருவர் மது போதையுடன் வருகை தந்ததுடன், சாராயப் போத்தல் மற்றும் மாவா என்பனவும் ஆலய பக்தர்களால் மீட்கப்பட்டு குருக்கள் விரட்டியடிக்கப்பட்டுள்ளார். இடம் பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தரின் கண்காணிப்பின் கீழ் உள்ள ஆலயம் ஒன்றின் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. குறித்த மகோற்சவத்திற்கு வருகை தந்த குருக்கள் மது போதையில் ஆலயத்திற்கு சென்று பூஜை செய்ததுடன், அங்குள்ள மக்களுடனும் முரண்பட்டுள்ளார்.

குறித்த குருக்கள் மது போதையில் இருந்துள்ளதுடன், அவரிடம் இருந்து சாராயப் போத்தல் மற்றும் மாவா என்பனவும் ஆலயப் பக்தர்களால் மீட்க்கப்பட்டுள்ளது. இதனையடுத்து ஆலய பக்தர்கள் பிறிதொரு குருக்களை



அழைத்து அவரிடம் குறித்த குருக்களை ஒப்படைத்து ஆலயத்தில் இருந்து வெளியேற்றியுள்ளனர். இதேவேளை வவுனியாவில் சில குருமார் தொடர்பான பல முறைப்பாடுகள் அண்மை காலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# சிறிதளவும் English தெரியாமல் கனடா வந்த சிறுவன் எப்படி Top Student - ஆனார்?

இது எல்லோரும் வாசிக்க வேண்டிய வெற்றிக்கதை. வெற்றி பெற்ற மாணவனின் தாயார் தான் பெற்ற வெற்றி போல் ஏனைய தமிழ்ப் பெற்றோரும் பெற வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் தன் கதையை இவ்வாறு கூறினார்:

நாங்கள் இலங்கையிலிருந்து கனடா வந்தபோது எங்களுடைய மகனுக்கு 3 வயது முடிந்து சில மாதங்கள் ஆகியிருந்தது. புதிய இடம், வித்தியாசமான சூழ்நிலை ஆகிய காரணங்களால் மகன் மற்றவர்களிடமிருந்து சிறிது ஒதுங்கியே இருந்தார். விளையாடுவதில் மட்டும் ஆர்வமாகவும் படிப்பதில் நாட்டம் இல்லாமலும் இருந்தார்.

தமிழ் மட்டுமே தெரிந்திருந்த காரணத்தாலும் ஆங்கிலம் சிறிதளவும் தெரியாதபடியாலும் பாடசாலை செல்லத் தயங்கினார். ஏனென்றால், அவரை Play School க்கோ Pre -School க்கோ அனுப்பக்கூடிய சந்தர்ப்பம் அமையவில்லை. அவரை வீட்டில் வைத்துப் படிப்பிப்பதற்கு எவ்வளவோ முயற்சி செய்தோம். ஆனால், மகன் ஆங்கிலம் எழுதுவதற்கும் படிப்பதற்கும் விரும்பவேயில்லை. பாடசாலை செல்ல 5 மாதங்கள் மட்டுமே இருந்ததால் மகனை எப்படித் தயார்படுத்துவது என்றுதெரியாமல் திணறினோம். அவரைப்பற்றி எங்களுக்கு மிகவும் கவலையாக இருந்தது.

நல்லவேளை, முன்பு எப்போதோ சில மாணவ, மாணவிகளின் வெற்றிக்கதைகள் பற்றிப் பேப்பரில் வந்த கட்டுரையை வாசித்த எனது சகோதரி அதைக் கவனமாக வெட்டி வைத்திருந்ததால், அவர் எனக்கு Haran Masterஐப் பற்றிக் கூறினார். அவர் பல வருடங்களாகக் கல்வி கற்பித்துவரும் நிறுவனமான Bright Start Early Reading Centre -இல் மகனை சேர்க்கும்படி கூறினார். அவ்வாறே நான் மே மாதம் Haran Master-ஐத் தொடர்புகொண்டு மகனின் உண்மையான நிலைமையையும் எங்களது கவலையையும் எடுத்துச் சொல்லி மகனை அவரிடம் படிக்கச் சேர்த்து விட்டோம்.

என்ன ஆச்சரியம்! Haran Master - இடம் போகத் தொடங்கி ஒரு சில வாரங்களிலேயே மகனின் படிப்பில் ஏற்பட்ட மாற்றத்தைப் பார்த்ததும் நாங்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. பெரி.............ய மாற்றம்! எங்களுக்குப் பெரும் நிம்மதியாக இருந்தது.

Haran Master - இன் ஒரு பாரிய talent, சிறப்பு என்னவென்றால், அவர் பிள்ளைகளைக் கையாளும் விதம். அவர் படிப்பிக்கும் விதம். அவர் பெற்றோரையும் வகுப்பில் பின்னுக்கு இருக்க அனுமதிப்பதால் நாங்கள் இதை நேரில் காணக்கூடியதாக இருந்தது. அவர் வலுஇலகுவாகப் பிள்ளைகளின் மனதைக் கவரும்படி படிப்பித்து அவர்களின் மனதில் ஒரு ஊக்கத்தையும், நல்ல ஆர்வத்தையும் ஏற்படுத்தி விடுகிறார். இதுதான் மகனுக்கும் நடந்தது.

முன்பு ஆங்கிலத்தை வெறுத்த மகன் Haran Master இடம் ஆங்கிலம் படிப்பதற்கு மிகவும் ஆசையுடனும் ஆர்வத்துடனும் போனார். மூன்று மாதங்கள் முடிவதற்குள் அவர் ஆங்கில எழுத்துக்களை எல்லாம் சரியான முறையில் அழகாக



எழுதப் படித்துவிட்டார். அதோடு, எழுத்துக்களின் ஒலியைச் சரியான முறையில் உச்சரிக்கவும் கற்று விட்டார். இந்த Phonics-ஐ Haran Master படிப்பிக்கும் முறையே தனி. இந்த letter Sounds - ஐப் படிப்பிக்க நாங்கள் முன்பு YouTube மூலம் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தோம். அதெல்லாம் மகனுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் Haran Master - இன் கற்பிக்கும் முறையில் அவர் மிகவும் எளிதாகவும் ஆசையுடனும் கற்றுவிட்டார்.

செப்டம்பர்-இல் பாடசாலை தொடங்கியதும் மகன் எந்த ஒரு பயமும் இல்லாமல் ஆசையுடன் Kindergarten சென்றார். அதைப்பார்த்து நாங்கள் மிகவும் சந்தோஷப்பட்டோம். மற்றது, இப்பவும் மகன் Haran Master இடம் தொடர்ந்து படிக்கிறார். கிழமையில் ஒருநாள் மட்டும். Haran Master - இடம் போகும் நாள் எப்ப வரும் என்று காத்திருப்பார்.

அதுமட்டுமல்ல, இன்னுமொரு வேடிக்கையான விஷயம் சொல்ல வேண்டும். Haran Master -இடம் தான் படித்ததை மகன் வீட்டில் வந்து எங்களுக்கு class நடத்துவார். சரியாக Haran Master படிப்பிக்கின்ற அதே பாணியிலேயே வீட்டிலிருக்கும் தாத்தா, பாட்டி, எங்களுக்கும் படிப்பிப்பார். Vowel Sounds எல்லாம் Haran Master மாதிரியே உதாரணங்களுடன் விளங்கப்படுத்துவார். இப்ப, தானாகப் புத்தகங்களை விரும்பி வாசிக்கத் தொடங்கி விட்டார். அவரது பாடசாலை ஆசிரியரும் அவரது ஆங்கிலத் தரத்தைப் பாராட்டி என்னிடம் புகழ்ந்து கூறினார்". அவர்தான் class -இல் Top student அவருடைய உச்சரிப்பு perfect and clear என்று மகிழ்ச்சி பொங்கக் கூறிய அந்தத் தாய், Haran Master ஐப் பற்றிப் பெரிதும் பாராட்டி தன் நன்றியை இவ்வாறு தெரிவித்தார்:

'எங்கள் அன்பான Haran Master இடம் எங்களை அனுப்பி வைத்த இறைவனுக்கு முதல் நன்றி. படிப்பில் ஆர்வமே இல்லாமல் இருந்த எங்களது மகனைச் சரியான நேரத்தில் நல்லபடி மாற்றிய Haran Master-க்கு பல கோடி நன்றி. அவருக்கு நாங்களும், தாத்தா, பாட்டி உட்பட எங்கள் குடும்பத்தினர் எல்லோரும் மகிழ்ச்சியுடன் கூடிய நன்றியை மனதாரத் தெரிவித்துக் கொள்கிறோம். அதோடு Haran Master -க்கு இறைவன் நல்லாசிகளை வழங்கி, அவரது சேவையில் மேன்மேலும் வளர இறைவனைப் பிரார்த்திக்கிறோம்' என்று உள்ளம் நிறைந்து கூறினார்.

Haran Master -இடம் நீங்களும் உங்கள் பிள்ளைகளை English, Math படிப்பதற்குச் சேர்க்க விரும்பினால், அல்லது அவரைப் பாராட்ட விரும்பினால், அவரை

Bright Start Early Reading Centre

(647)-290-5207 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம். உங்களுக்கும் எம்மைப்போலவே வெற்றி நிச்சயம்!

# தெற்கில் இருந்து கிளம்பும் சர்வதேச விசாரணைக் கோரிக்கை

– வீ.தனபாலசிங்கம் –

பிரிட்டனின் சனல் 4 தொலைக்காட்சி அலைவரிசை இலங்கை விவகாரங்கள் தொடர்பில் விவரணக் காணொளிகளை வெளியிடும் சந்தர்ப்பங்களில் எல்லாம் கிளம்பும் சர்ச்சைகள் சர்வதேச கவனத்தை ஈர்த்து விடுகின்றன.

உள்நாட்டுப் போரின் இறுதி வாரங்கள் பற்றி 'இலங்கையின் கொலைக்களங்கள்' (Sri Lanka's Killing fields) என்ற தலைப்பில் 12 வருடங்களுக்கு முன்னர் சனல் 4 வெளியிட்ட புலனாய்வு விவரணக் காணொளியை நாம் எல்லோரும் பார்த்தோம்.

2011 ஜீன் 14 ஒளிபரப்பான இலங்கையின் கொலைக்களங்கள்' பிரிட்டனின் தொலைக்காட்சி வரலாற்றில் மிகவும் விரி விளக்கமான விவரணக் காணொளிகளில் ஒன்று என்று கூட வர்ணிக்கப்பட்டது. அது மோதல் வலயத்தில் இடம் பெற்ற அதிர்ச்சியும் அச்சமும் தருகின்ற கொடூரமான போர்க் குற்றங்களை உலகிற்கு காண்பித்தது.

ஸ்கொட்லாந்து திரைப்படத் தயாரிப்பாளரும் பத்திரிகையாளருமான கலம் மக்ரேயின் நெறியாள்கையில் பிரிட்டிஷ் தொலைக்காட்சி அறிவிப்பாளர் ஜோன் சினோவின் விளக்கத்துடன் வெளியான அந்த காணொளியில் போரில் உயிரத் தப்பிய குடிமக்கள், அந்த காலப்பகுதியில் இலங்கையில் இருந்த ஐக்கிய நாடுகள் பணியாளர்கள், மனித உரிமைகள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் சர்வதேச சட்ட நிபுணர்களின் நேர்காணல்களும் இடம்பெற்றிருந்தன.

இலங்கை அரசாங்கத்தினால் 'போலியானது' என்று வர்ணிக்கப்பட்ட காணொளியை மறுதலிக்க பாதுகாப்பு அமைச்சு 'திட்டமிட்ட பொய்கள்' ( Lies Agreed upon ) என்ற தலைப்பில் விவரணக் காணொளியை தயாரித்து வெளியிட்டது. ஆனால் 'இலங்கையின் கொலைக்களங்களுக்கு' சிறந்த விவரணக் காணொளிகளுக்கான சர்வதேச விருதுகள் சிலவும் கிடைத்தன. இப்போது 12 வருடங்களுக்குப் பிறகு கடந்த வாரம் (செப்.5) இலங்கை தொடர்பில் சனல் 4 வெளியிட்டிருக்கும் இன்னொரு விவரணக் காணொளி மீண்டும் பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கிறது.

2019 ஈஸ்டர் ஞாயிறு (ஏப்ரில் 21) கொழும்பிலும் நீர்கொழும்பிலும் மட்டக்களப்பிலும் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் ஆடம்பர ஹோட்டல்களிலும் பல வெளிநாட்டவர்கள் உட்பட 269 பேரைப் பலிகொண்ட குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் 'இலங்கையின் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் செய்தி அனுப்பீடுகள்' (Sri Lanka's Easter Bombings — dispatches) என்ற தலைப்பிலான புதிய காணொளி அந்த குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இருந்ததாகச் சந்தேகிக்கப்படும் பெரிய அரசியல் சதித்திட்டம் ஒன்று பற்றிய தகவல்களை பிரதானமாக சுவிட்சர்லாந்தில் தஞ்சம் கோரியிருக்கும் இலங்கையர் ஒருவரின் நேர்காணலின் மூலம் வெளிப்படுத்துகிறது.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என்ற சிவனேசதுரை சந்திரகாந்தனின் ஊடகப் பேச்சாளராகவும் நிதிச் செயலாளராகவும் முன்னர் பணியாற்றிய ஹன்சீர் அசாத் மௌலானா என்பவரே சனல் 4 அலைவரிசைக்கு நேர்காணலை வழங்கியிருப்பவர்.

ராஜபக்சாக்களை மீண்டும் அதிகாரத்துக்கு கொண்டு வருவதற்கு குறிப்பாக கோட்டாபய ராஜபக்சவை ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற வைப்பதற்கு வசதியாக நாட்டில் பாதுகாப்பற்ற அச்சமான சூழ்நிலையை உருவாக்கும் நோக்குடன் தீட்டப்பட்ட சதித்திட்டத்தின் விளைவே ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் என்று நிறுவுவதை இலக்காகக் கொண்டே அசாத் மௌலானா தகவல்களை கூறுகிறார்.

குண்டுத் தாக்குதல்களை நடத்த இஸ்லாமிய தீவிரவாதிகளை பயன்படுத்துவதற்கு தனது உதவியை இராணுவ புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராக இருந்த மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே நாடியது பற்றியும் அது விடயத்தில் தான் செய்த காரியங்களையும் கூறும் அவர். பிள்ளையானையும் அந்த சதித் திட்டத்தின் ஒரு பங்காளியாக காண்பிக்கிறார்.




சதித்திட்டம் பற்றிய தகவல்களுக்கு அப்பால் 'சண்டே லீடர் ' ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலை, பிள்ளையானைமுன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பராராஜசிங்கம் கொலைவழக்கில் இருந்து விடுவிக்க நீதித்துறையில் செய்யப்பட்ட தலையீடுகள் போன்ற வேறு விவகாரங்கள் தொடர்பிலும் மௌலான பல விடயங்களை கூறியிருக்கின்றார் என்ற போதிலும் இந்த கட்டுரையின் நோக்கம் சனல் 4 காணொளிக்கு பிறகு ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு விடுக்கப்படும் கோரிக்கைகளில் கவனம் செலுத்துவதே என்பதால் அவற்றை அலசவதை இங்கு தவிர்க்கிறோம்.

இலங்கையின் கொலைக்களங்கள்' காணொளியை நிராகரித்து அன்றைய அரசாங்கம் அதன் எதிர்வினையைக் காட்டுவதில் அவதானிக்கக் கூடியதாக இருந்த முனைப்பை புதிய காணொளி விவகாரத்தில் தற்போதைய அரசாங்கத்திடம் காணமுடியவில்லை.

ஜெனீவாவில் ஆரம்பமாகும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54வது கூட்டத் தொடருக்கு முன்னதாக அரங்கேற்றப்படும் ஒரு 'நாடகமாக' சனல் 4 காணொளியை நோக்கும் அரசாங்கம் அதில் முன் வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு ஒரு வரம்புக்கு உட்பட்டதாக பதிலளிப்பதே பொருத்தமானது என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாகக் கூறப்பட்டது.

காணொளியில் முன் வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகளில் குறிப்பிடப்படுபவர்கள் மாத்திரம் பதிலளிக்க வேண்டுமே தவிர முழு அரசாங்கமும் அதைச் செய்யத் தேவையில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைக் கூட்டத்தில் கூறியதாக கடந்த வாரம் செய்திகள் வெளியான போதிலும், கடந்த சனிக்கிழமை அரசாங்கத்தின் சார்பில் பாதுகாப்பு அமைச்சு குற்றச்சாட்டுக்களை திட்டவட்டமாக மறுத்து அறிக்கையொன்றை வெளியிட்டது.

காணொளி குறித்து அரசாங்கம் புதிய விசாரணையொன்றை நடத்தும் என்றும் பாராளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைப்பது தொடர்பிலான அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் பாராளுமன்றத்தில் அமைச்சர் மனுஷ நாணயக்கார முதலில் அறிவித்தார்.

அதேவேளை இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் கடந்தவாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது தனது முன்னாள் செயலாளர் ஒரு ஏமாற்றுப் பேர் வழி என்றும் அவர் தான் தப்பிப் பிழைப்பதற்காக மற்றவர்களுக்கு துரோகமிழைக்கிறார் என்றும் குறிப்பிட்டார். இலங்கையில் தன்னால் வாழ முடியாது என்று பொய் கூறி மௌலானா வெளிநாட்டில் அரசியல் தஞ்சம் கோருகிறார். ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களின் சூத்திரதாரிகள் இஸ்லாமியத் தீவிரவாதக் குழுவினரே என்பதை கத்தோலிக்கத் திருச்சபையும் மற்றையவர்களும் விளங்கிக்கொள்ள வேண்டும் என்று பிள்ளையான் கூறினார்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச கடந்த வியாழக்கிழமை நீண்டதொரு அறிக்கையை வெளியிட்டு சனல் 4 காணொளி ராஜபக்சாக்களுக்கு எதிரான வசைமாரி என்றும் அதன் பிரதான நோக்கம் 2005 தொடங்கி ராஜபக்சாக்களின் மரபுக்கு கரி பூசுவதேயாகும் என்றும் கூறியிருக்கிறார். அந்த அலைவரிசையினால் முன்னர் வெளியிடப்பட்ட காணொளிகளைப் போன்றே இதுவும் பொய்கள் நிரம்பியதாக இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சனல் 4 காணொளி கிளப்பியிருக்கும் சர்ச்சை தென்னிலங்கையில் இருந்து சர்வதேச விசாரணைக் கோரிக்கை கிளம்புகின்ற சூழ்நிலையை தவிர்க்க முடியாமல் தோற்றுவித்திருப்பது ஒரு புதிய திருப்பமாகும். காணொளியின் தகவல்கள் குறித்து சர்வதேச விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும் என்று கொழும்பு அதிமேற்றிராணியார் கார்டினல் மல்கம் ரஞ்சித், எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா ஆகியோர் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் குறித்த விசாரணைகளில் ஆரம்பத்தில் ஈடுபடுத்தப்பட்டு பின்னர் அரசாங்கத்தினால் இட மாற்றம் செய்யப்பட்ட உள்நாட்டு குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளின் உதவியுடன் சுயாதீன சர்வதேச குழுவொன்றினால் விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கூறிய கார்டினல் மீண்டும் ஒரு பாராளுமன்றத் தெரிவுக் குழுவை அமைப்பது நேரத்தையும் வளங்களையும் விரயம் செய்யும் ஒரு காரியமாகவே முடியும் என்று குறிப்பிட்டார்.

உள்நாட்டில் வெளிப்படையானதும் நியாயமானதுமான விசாரணையொன்று நடத்தப்படவில்லை என்பதனாலேயே சர்வதேச விசாரணையைக் கோருவதாக கூறிய பிரேமதாச குண்டுத்தாக்குதல்கள் குறித்து முன்னர் வெற்றிகரமாக விசாரணையை நடத்திக் கொண்டிருந்த போது அதில் இருந்து நீக்கப்பட்ட குற்றவியல் புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவிடம் புதிய விசாரணையை ஒப்படைக்கவேண்டும் என்று அரசாங்கத்தை வலியுறுத்துகிறார். பொன்சேகாவும் கடந்தவாரம் பாராளுமன்றத்தில் சர்வதேச விசாரணையே வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

கார்டினல் மல்கம் ரஞ்சித்தைப் பொறுத்தவரை ஈஸ்டர் குண்டுத்தாக்குதல்களில் பலியானவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நீதி கிடைக்காவிட்டால் சர்வதேச நீதிமன்றம் ஒன்றின் விசாரணையைக் கோரும் நிர்ப்பந்தம் ஏற்படும் என்று இரு வருடங்களுக்கு முன்னரே கூறியிருந்தார் என்பதும் கடந்த வருடம் மார்ச் மாதம் ஜெனீவா சென்று அன்றைய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்சேல் பாச்லேயை சந்தித்து குண்டுத்தாக்குதலில் பலியானவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் நீதி கிடைப்பதில் தாமதம் ஏற்படுவது குறித்து தனது விசனத்தை வெளிப்படுத்தி முறையிட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதேவேளை உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டங்களில் இடம் பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச சமூகம் காட்டும் அக்கறையை கார்டினல் கடுமையாக கண்டனம் செய்தார் என்பது முக்கியமாக நினைவுபடுத்தப்பட வேண்டியதாகும்.

காலாதிகாலமாக மத நம்பிக்கையுடையதாக விளங்கிவரும் இலங்கை போன்ற நாடொன்றுக்கு மேற்குலக நாடுகள் மனித உரிமைகள் குறித்து 'போதனை' செய்வது மிகவும் கண்டிக்கத்தக்கது. மேற்குலகின் புதிய மதமாக மனித உரிமைகள் வந்து விட்டன என்று ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்களுக்கு முன்னரான காலப்பகுதியில் 2018 செப்டெம்பரில் ஞாயிறு ஆராதனையொன்றில் கார்டினல் கூறியதாக பதிவுகள் உள்ளன. வேறு பல சந்தர்ப்பங்களிலும் அவர் சர்வதேச தலையீடுகளுக்கு எதிராக கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வந்தார்.

சனல் 4 காணொளியின் நம்பகத்தன்மை குறித்து வேறுபட்ட அபிப்பிராயங்கள் இருக்கலாம். அது வேறு விடயம். ஆனால் குண்டுத்தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளில் காணப்படுகின்ற வழமைக்கு மாறான தாமதங்களும் உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டறிவதில் காணப்படும் அக்கறையின்மையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி மறுக்கப்படுகின்றது என்ற குற்றச்சாட்டை மாத்திரமல்ல, பின்னணியில் இருந்திருக்கக் கூடியவர்களை பாதுகாப்பதில் கவனம் செலுத்தப்படுகின்றது என்ற சந்தேகத்தையும் கடுமையாக வலுப்படுத்துகிறது.

இந்த நிகழ்வுப் போக்குகள் எல்லாம் போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையில் பல வருடங்களாக உறுதியாக இருக்கும் தமிழர்களின் நிலைப்பாட்டின் நியாயத்தையே பிரகாசமாக துலங்க வைக்கின்றன.

ஆனால், தென்னிலங்கையில் இன்று சர்வதேச விசாரணையைக் கோருபவர்கள் தங்களின் கோரிக்கையை நியாயப்படுத்துவதற்கு கூறும் காரணங்களே அடிப்படையில் தமிழர்களின் கோரிக்கையின் பின்னணியிலும் இருக்கிறது என்பதை இனிமேலாவது ஒத்துக்கொள்ள முன் வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அது தான் இலங்கை அரசியல்.

# 12வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! செப்டம்பர் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர் காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

12 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 12 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவு களே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.


தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

09 செப்டம்பர் 2023 முதல் 15 செப்டம்பர் 2023 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 12வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 21வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு தம்பிராஜா ஞானானந்தன்

வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 21வது ஆண்டு நினைவு நாள் 12 செப்டம்பர் 2023 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அன்னாரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவசுந்தரம் உமாதேவி

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த (நாகபூஷணி அரிசி ஆலை) திருமதி சிவசுந்தரம் உமாதேவி அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாள் 13 செப்டம்பர் 2023 புதன்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சிவசுந்தரம் உமாதேவி அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 21வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு முத்துத்தம்பி கோபாலபிள்ளை

சரவனை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு முத்துத்தம்பி கோபாலபிள்ளை (இராஜகுரு) அவர்களது 21வது ஆண்டு நினைவு நாள் 10 செப்டம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். அமரர் திரு முத்துத்தம்பி கோபாலபிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 35வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு சிவபாக்கியநாதன் கணபதிப்பிள்ளை

யாழ்ப்பாணம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களது 35வது ஆண்டு நினைவு நாள் 18 செப்டம்பர் 2023 விநாயகர் சதுர்த்தி தினமான திங்கட்கிழமையாகும். அன்றைய நாளில் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். அமரர் திரு கணபதிப்பிள்ளை சிவபாக்கியநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக்குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 33வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம்

யாழ்ப்பாணம் வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது 33வது ஆண்டு நினைவு நாள் 18 செப்டம்பர் 2023 விநாயகர் சதுர்த்தி தினமான திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர், சகோதர்கள் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கவுள்ளார்கள். செல்வன் ஜெயந்தன் இன்பநாயகம் அவர்களது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் அவரது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை

புங்குடுதீவு நான்காம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் முதலாம் வட்டாரத்தை வதிவிடமாகவும் சாவகச்சேரி, கனடா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சாவகச்சேரி ரஞ்சனா கபே உரிமையாளர் திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 14 செப்டம்பர் 2023 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 29,3வது ஆண்டு நினைவஞ்சலிகள்



### திரு சின்னப்பு சிங்கநாயகம்


### திருமதி பரிமளம் சிங்கநாயகம்

தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்களான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 29வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 3வது ஆண்டு நினைவு நாளுக்காகவும் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக 13 செப்டம்பர் 2023 புதன்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு திருமதி சிங்கநாயகம் பரிமளம் இணையரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்



09 செப்டம்பர் 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திரி திருமதி ரஞ்சன் சந்திரிகா தம்பதிகளின் செல்வப்புதல்வி ஸ்ரீவர்ஷா ரஞ்சன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி ஸ்ரீவர்ஷா தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



10 செப்டம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை சரவனை மேற்கு வேலணையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த இராஜகுரு என்று அன்பாக அழைக்கப்படும் திரு முத்துத்தம்பி கோபாலபிள்ளை அவர்களது 21வது ஆண்டு நினைவு நாளாதகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




02 செப்டம்பர் 2023 சனிக்கிழமை கனடாவில் வசிக்கும் திருமதி செல்வராணி ஜெகதேவா அவர்களது 75வது பிறந்த நன்நாளாகும். அனறைய நாளுக்காக திருமதி செல்வராணி ஜெகதேவா அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து 10 செப்டம்பர் 2023 ஞாயிற்றுக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



12 செப்டம்பர் 2023 செவ்வாய்க்கிழமை வேலணை தலையாட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தம்பிராஜா ஞானானந்தன் அவர்களது 21வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



12 செப்டம்பர் 2023 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி துஷியந்தன் இந்துகா தம்பதிகளின் செல்வப்புதல்வன் Jonavin Bhairav வின் முதலாவது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வன் Jonavin Bhairav. தனது பெற்றோர்களுடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவும் இனிப்பு வகைகளும் வழங்கி மகிழ்ந்தார்.




13 செப்டம்பர் 2023 புதன்கிழமை சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவசுந்தரம் உமாதேவி (நாகபூஷணி அரிசி ஆலை) அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



13 செப்டம்பர் 2023 புதன்கிழமை தெல்லிப்பளையைச் சேர்ந்தவர்கான திரு சின்னப்பு சிங்கநாயகம் அவர்களது 29வது ஆண்டு நினைவாகவும் திருமதி பரிமளம் சிங்கநாயகம் அவர்களது 3வது ஆண்டு நினைவாகவும் அன்னார்களது குடும்பத்தினர் இணையர்களது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்



14 செப்டம்பர் 2023 வியாழக்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி தர்மஸ்ரீ தனுஷா தம்பதிகளின் செல்வப்புதல்வி தஜானி தர்மஸ்ரீயின் 21வது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் செல்வி தஜானி தனது பெற்றோர்களுடனும் உடன்பிறப்புக்களுடனும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



14 செப்டம்பர் 2023 வியாழக்கிழமை புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1ம் வட்டாரத்தை வதிவிடமாகவும் சாவகச்சேரி, கனடா ஆகிய இடங்களை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகநாதர் கணபதிப்பிள்ளை அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.



15 செப்டம்பர் 2023 வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் வாழம் செல்வன் கேசவன் விஜயதாசன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.



08 செப் 2023 வெள்ளிக்கிழமை கனடாவில் வசிக்கும் செல்வன் மிரேன் விஜயரஞ்சன் அவர்கள் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.

## கனடா இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கம் கிளிநொச்சியில் சுமார் 45 லட்சம் ரூபா செலவில் அன்பு இல்லக் குழந்தைகளுக்கான அரங்கத்தினை அமைக்க நிதியுதவி





AJITH SABARATNAM INSURANCE & INVESTMENTS INC.
AJITH SABARATNAM President
Cell: 647.401.5800
email: ajithsaba@gmail.com
125 Topflight Dr, 2nd floor
Mississauga ON. L5S 1Y1
Tel: 416.439.2800

Cash Point PAWN BROKERS
$1000 $20/month
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
1.5% முதல் 2% வட்டி (per month)
416-757-0034 · 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

நியூ ரங்கனாஸ் தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102
Scarbrough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

நந்தா NANTHA CATERS
Sri Lankan & Indian Food
BEST CATERS IN TOWN
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kippling & Steeles - 5010 Steeles Ave. |
Call 416 NANTHA 1 - 416 626 8421

N.K.S DRAPERY & BLINDS FABRIC
•Custom Made Vertical Blinds •Venetian Blinds •Draperies •Curtain •Shutters •Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

SASITHARAN LAW PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

RE/MAX Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com

Century 21
JEESETHA JEGANATHAN
BUYING & SELLING MADE EASY WITH THE JJ TEAM!
JAY JEGANATHAN
JEYSURESH JEGANATHAN

UTHAYAS SUPER MARKET
5010 Steeles Ave W, Etobicoke, ON M9V 5C6
416-740-7971

GODAVARI
Truly South Indian
416-431-5577
416-901-5578
795 Markham Rd, Scarborough, ON M1H 2Y2
godavarica.com
godavaritoronto@gmail.com

Chapel Ridge FUNERAL HOME & CREMATION CENTRE
FUNERAL ARRANGEMENTS OF YOUR LOVED ONES
S. Christeen
416-258-6759



முல்லைத்தீவு புனிதபூமி அன்பு இல்லக் குழந்தைகளின் வாழ்வாதாரத்திற்காகவும், கல்வி மேம்பாட்டிற்காகவும்

உங்கள் அபிமான **ஈழநாடு** பத்திரிகை

12வது ஆண்டாக நடாத்தும்

# ஊட்டும் கரங்கள்

வெள்ளி விழா கண்ட அரவிந்தனின் மெகா ரியூனேர்ஸ் இசையில்

Mega Tuners



பிரபல பின்னணிப் பாடகர் **முகேஷ்**



பிரபல பின்னணிப் பாடகி **சுர்முகி**

OCTOBER 29 2023 SUN @ 6:00PM

ARMENIAN COMMUNITY CENTRE
50 HALLCROWN PLACE
TORONTO
(VICTORIAL PARK & CONSUMER ROAD)

கனேடிய தமிழ்ப்பாடகர்கள் இணைந்து வழங்கும்

# இன்னிசை மாலை

அன்பளிப்பு

**$200.00 • $100.00 • $50.00**

விழா குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும்

**சிறப்பு உணவு:** றொறன்ரோவின் முன்னணி உணவகமான **நந்தா கேற்றறிங்** வழங்கும் சிறப்பு உணவு அனைத்து பார்வையாளர்களுக்கும் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு:

**ஈழநாடு பரமேஸ் - 416.841.9600**

தயவு செய்து நுழைவுச்சீட்டுடன் மண்டபத்திற்கு வரவும்.

நிகழ்வுகள் சரியாக மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்.

தங்கள் ஆதரவுக்கு நன்றிகள்

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.
லோகன் இராசையா
416 991 1292
Can West Transport

TECHSOURCE
Computer, Electronics & Cellphones Liquidator
1260 Kennedy Rd, Scarborough, ON
416.757.9111
994 Albion Rd Etobicoke, ON
647.352.2229

KANAGAAMBIKAI GOLD HOUSE
We Sell *Singapore Jewellery *Finest Quality 22K Gold *Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide *Jewellery Repairs Pawning Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3, SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197

HAYHER & VASAN LITIGATION LAWYERS
CAOUTHAM VASAN
208-885 PROGRESS AVE SCARBOROUGH, ON
207-32 VILLAGE CENTRE PLACE MISSISSAUGA, ON
• Personal Injury • Real Estate • Wills and Estates • Immigration
vasan@hvlaw.ca
905-461-1515

வசந்தம் சுப்பர்மார்க்கெட்
2900 Markham Road, Scarborough, ON M1X 0C8
416 292 8585

TIMES IRON WORKS INC.
Times Metals

அன்பு இல்லக் குழந்தைகளுக்காக ஈழநாடு பத்திரிகை நடாத்தும் விழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Main Branch Scarborough 309-80 Corporate Dr Scarborough, ON M1H3G5
Mississauga Branch 45-2355 Derry Road Mississauga, ON L5S1V6
Tel: 416.439.0224
Fax: 416.439.0226

Century 21 Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303

MORTGAGE LOAN J.R.B UNIVERSAL INC.
ALMOST ALL SERVICES AVAILABLE
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164

Chapel Ridge Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

STANDARD MORTGAGES INC.
Tel: (416) 298-1700
Fax: (416) 754-8651
Cell: (416) 993-2638
Toll Free: 1-866 765 9427
Toll Free Fax: 1-866 765 9375
raj@smi4loan.com
www.standardmortgagesinc.com
RAJ SUBRAYAM
Director

NON-MEDICAL INSURANCE
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance • Critical Illness • RESP • Disability • RRSP • Mortgage Protection Insurance • Travel Insurance

உ
சுவாமியே சரணம் ஐயப்பா



# அருள்மிகு கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE



635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8 Canada Tel: 416-321-6104 Fax: 416-321-7557 www.ayyappan.com
Facebook: Canada Sri Ayyappan Hindu Temple

## ஆவணிச் சதுர்த்திப் பெருவிழா விஞ்ஞாபனம்
## (ஏகதின லட்சார்ச்சனை மஹா கணபதி ஹோமம், பால்குட அபிஷேகம், மோதக அர்ச்சனை)
## கை மேல் பலன் தரும் அற்புத விரதம்
## 18.09.2023 திங்கட்கிழமை

எம் பெருமான் மெய்யடியார்களே!
கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தி பெருவிழாவை முன்னிட்டு விநாயகப் பெருமானுக்கு 18.09.2023 திங்கட்கிழமை காலை 5.00 மணிமுதல் மஹா கணபதி ஹோமம், சங்காபிஷேகம், அடியார்கள் பங்குபற்றும் பால்குட அபிஷேகம், மோதக அர்ச்சனை, ஏகதின லட்சார்ச்சனை என்பன நடைபெற்று இரவு 7.30 மணிபூசையுடன் அலங்கரிக்கப்பட்ட மஞ்சத்தில் தவில் நாதஸ்வர கச்சேரியுடன் பக்திப் பரவசமாக வீதிவலம் அருட்காட்சி நடைபெறும். அடியார்கள் தவறாது கலந்து உபயங்களைச் சிறப்பித்து ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| மஹா கணபதி ஹோமம் | காலை 5.00 மணி |
| 108 சங்காபிஷேகம் | காலை 6.00 மணி |
| பாற்குட அபிஷேகம் | காலை 6.00 மணி |
| விசேட பூஜை | காலை 7.00 மணி |
| 1ஆம் கால லட்சார்ச்சனை | காலை 8.30 மணி |
| 2ஆம் கால லட்சார்ச்சனை | காலை 9.15 மணி |
| பாற்குட, 10கும்ப அபிஷேகம் | காலை 10.00 மணி |
| விசேட பூஜை | பகல் 11.00 மணி |
| 3ஆம் கால லட்சார்ச்சனை | பகல் 11.30 மணி |
| 4ஆம் கால லட்சார்ச்சனை | பகல் 12.30 மணி |
| 5ஆம் கால லட்சார்ச்சனை | பகல் 2.00 மணி |
| 6ஆம் கால லட்சார்ச்சனை | பகல் 2.45 மணி |
| 7ஆம் கால லட்சார்ச்சனை | பகல் 3.30 மணி |
| 8ஆம் கால லட்சார்ச்சனை | மாலை 4.15மணி |
| 9ஆம் கால லட்சார்ச்சனை | மாலை 5.00 மணி |
| 10ஆம் கால லட்சார்ச்சனை | மாலை 5.45 மணி |

10 கும்ப அபிஷேகம்,
பாற்குட அபிஷேகம் மாலை 6.30 மணி.
மாலை 7.30 மணிக்கு விஷேட பூஜை நடைபெற்று
வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து
பிள்ளையார் வீதிவலம் வருவார்.

## பொது மக்கள் கலந்து கொள்ளும் உபயம்

லட்சார்ச்சனை, கணபதி ஹோமம், பாற்குட அபிஷேகம்,
மோதக அர்ச்சனை ஆகியவற்றில்
பங்கு பெற விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் முன்கூட்டியே பதிவு செய்யவும்.

ஐயப்பன் ஆலய ஐந்து ஏக்கர் நிலம் வாங்கியதும், பல திருப்பணிகள் கைகூடியதும்,
பல அடியார்களின் வேண்டுதல்கள் நிறைவேறியதும் ஐயப்பன் ஆலயத்தில்
ஆவணி சதுர்த்தி தினத்தில் ஏகதின லட்சார்ச்சனை ஆரம்பித்ததன் காரணமாகவே.
எனவே பல சிறப்புக்கள் வாய்ந்த இப்புண்ணிய தினத்தில் முடிந்த உபயங்களை
மேற்கொண்டு புண்ணிய பலன்களைப் பெற்றுய்யும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்.

**பூக்கள், அறுகு, பூசைப்பொருட்களை ஆலயத்தில் ஒப்படைக்கலாம்.**

இறைசேவையிலுள்ள அறங்காவலர் சபையினர்

# சனல் நாலு யாருக்கு நன்மை செய்கின்றது?

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



சனல் நாலு மீண்டும் ஒரு வீடியோவை வெளியிட்டிருக்கிறது. முன்னைய வீடியோவைப் போலவே, இதுவும் ஜெனீவா கூட்டத் தொடரை முன்னிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் கூறப்பட்ட தகவல்கள் உண்மையாக இருந்தால் இலங்கைத்தீவின் அரச கட்டமைப்பும் அதன் உபகரணங்களும் எந்தளவுக்கு நம்பகத் தன்மையற்றவை என்பதனை அது வெளிப்படுத்தியிருக்கிறது. அசாத் மௌலானா அந்த வீடியோவின் இறுதிப் பகுதியில் கூறுகிறார்...அதிகாரத்துக்காக தமது சொந்த மக்களையே கொன்றிருக்கிறார்கள் என்று.

அசாத் மௌலானா பிள்ளையானின் உதவியாளராக இருந்தவர். அவருடைய தகப்பன் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தில் இருந்தவர். சொந்தப் பெயர் மிகிலார். இயக்கப் பெயர் கமலன். தமிழகத்தில் அந்த இயக்கத்தின் தலைவர் பத்மநாபா கொல்லப்பட்டபோது அவரோடு கொல்லப்பட்டவர். அசாத் மௌலானா சனல் நாலு வீடியோவில் பிள்ளையானுக்கும் இலங்கை படைப் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருக்கும் எதிராகச் சாட்சியமளித்துள்ளார்.

இது தொடர்பில் அனைத்துலக விசாரணை தேவை என்று ஏற்கனவே கர்தினால் மல்கம் ரஞ்சித் கூறி வருகிறார். முஸ்லிம்களும் அவ்வாறான கோரிக்கையை ஏற்கனவே முன்வைத்து விட்டார்கள். இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அக் கோரிக்கையை முன் வைத்திருக்கின்றார்.

அதாவது இலங்கைத்தீவின் மூன்று இனங்களும் வெவ்வேறு காரணங்களுக்காக அனைத்துலக விசாரணையைக் கேட்கின்றன. இலங்கைத்தீவின் உள்நாட்டு நீதி பரிபாலனக் கட்டமைப்பு, புலனாய்வுக் கட்டமைப்பு ஆட்சி முறைமை என்பவற்றின் தோல்வியை இது காட்டுகிறது?

ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுவதற்காக எந்தக் கொடிய செயலையும் செய்யலாம் யாரையும் கருவியாகப் பயன்படுத்தலாம் என்று ஒரு மனப்பாங்கு எங்கிருந்து தோன்றியது? அதுவும் தேரவாத பௌத்த பண்பாட்டுக்குள் அது எங்கிருந்து தோன்றியது? இனமுரண்பாட்டின் நேரடி விளைவு அது. ஒரு இனத்தை அழிப்பதன் மூலம் அல்லது இனப்பகையைத் தூண்டுவதன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றலாம் என்ற சிங்கள பௌத்த அரசுப் பாரம்பரியத்தின் தொடர் விளைவுகளில் ஒன்றுதான் அது. முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள பௌத்த உணர்வுகளைத் தூண்டி தனிச்சிங்கள பௌத்த வாக்குகளைத் திரட்டலாம் என்று நம்பியமை.

அந்த நம்பிக்கை பொய்க்கவில்லை. சிங்கள மக்கள் அந்தக் குடும்பத்துக்கு 2019இல் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வழங்கினார்கள். ஆனால் அதே சிங்கள மக்கள் அந்தக் குடும்பத்தை ஓட ஓட விரட்டினார்கள். கடந்த ஆண்டு அந்தக் குடும்பம் இராணுவ முகாம்களிலும் வெளிநாடுகளிலும் ஒளிக்க வேண்டியிருந்தது. ஆனால் இந்த ஆண்டு அவர்கள் ஒப்பீட்டளவில் தற்காப்பு நிலைக்கு வந்து விட்டார்கள்.

லிபரல் முக மூடி அணிந்த ரணில் விக்ரமசிங்கவின் மறைவில் அவர்கள் படிப்படியாகத் தற்காப்பு நிலையில் இருந்து தாக்கும் நிலைக்கு முன்னேறத் தொடங்கி விட்டார்கள். சனல் நாலு தொடர்பாக நாடாளுமன்றத்தில் ராஜபக்சகளின் கட்சிக்காரர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதிலிருந்து அதைத் தொகுத்துப் பார்க்கலாம். இவ்வாறு ராஜபக்சக்கள் தற்காப்பு நிலையில் இருந்து தாக்கும் நிலைக்கு முன்னேறுவதைத் தடுக்க வேண்டும் என்று மேற்கு நாடுகளும் விரும்பும் பன்னாட்டு நாணய நிதியமும் விரும்பும். அந்த விருப்பத்தை சனல் நாலு வீடியோ ஓரளவுக்கு நிறைவேற்றுமா? அந்த வீடியோவின் உடனடி விளைவாக ராஜபக்சக்களின் கீர்த்தி உலக அளவில் மேலும் கெடும். ராஜபக்சக்களின் அந்தஸ்து உலக அளவில் ஏற்கனவே கெட்டுப் போய் விட்டது. இப்பொழுது இந்த வீடியோ அதை மேலும் கெடுக்கும். ஆனால் அது அதன் எதிர்மறை விளைவாக உள்நாட்டில் அவர்களுக்கு ஆதரவைக் கூட்டக்கூடும்.

புலம்பெயர்ந்த புலிகள் அமைப்புகளும் வெள்ளைக்கார நாடுகளும் சேர்ந்து யுத்த வெற்றியை அபகரிக்கும் நோக்கத்தோடு உருவாக்கியதே அந்த வீடியோ என்று சொன்னால் அது சிங்கள பௌத்த கூட்டு உளவியலில் ஏதோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்.


மேலும், அடுத்த ஆண்டு செப்டம்பர் மாதம் நடக்கவிருக்கும் ஐநா கூட்டத் தொடரும் சிங்கள மக்கள் மத்தியில் மேற்குக்கு எதிரான உணர்வுகளை அதிகப்படுத்தும். செப்டம்பர் மாதத்திற்கு பின்னர் தான் ஜனாதிபதித் தேர்தல் வரும். எனவே தேர்தலில் மேற்கு நாடுகளுக்கும் புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளுக்கும் எதிரான உணர்வலைகள் வாக்களிப்பில் தாக்கம் செலுத்தும். இப்படிப் பார்த்தால் சனல் நாலு வெளியுலகில் ராஜபக்சக்களின் அந்தஸ்தை குறைத்திருக்கின்றது. அதேசமயம் உள்நாட்டில் அவர்களுக்கு அனுதாபத்தைப் பெருக்கக்கூடும்.

ஆனாலும் ராஜபக்சக்கள் அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் தேர்தலில் போட்டியிடும் மனோநிலையில் இல்லை என்றே தெரிகிறது. அவர்களுக்குத் தங்களை எப்படித் தற்காத்துக் கொள்வது என்று தெரியும். உலக அளவில் தங்களுடைய அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளும் வரை அவர்களுக்கு ஒரு பதிலி தேவை. ரணில் விக்கிரமசிங்க அதற்கு மிகப் பொருத்தமானவர். அவருக்குப் பின் பதுங்குவதன் மூலம் ராஜபக்சக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தம்மை மேலும் ஸ்திரப்படுத்திக் கொள்ளலாம். தென்னிலங்கையில் தன்னெழுச்சிப் போராட்டங்கள் தோற்கடிக்கப்பட்டு, கிட்டத்தட்ட ஓராண்டு காலத்துக்குள், ராஜபக்ச குடும்பம் பதுங்கும் நிலையிலிருந்து தற்காப்பு நிலைக்கு முன்னேறியிருப்பது அதைத் தான் காட்டுகின்றது. எனவே தம்மை முழுமையாக பலப்படுத்திக் கொள்ளும் வரை அவர்கள் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் குதிப்பார்களா என்பது சந்தேகமே.

அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதித் தேர்தலைக் குறித்து இடைக்கிடை வீறாப்பாகக் கருத்துக்களைத் தெரிவித்து வந்தாலும், ராஜபக்சக்கள் வெளிப்படையாக வாய் திறப்பதில்லை என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அக்குடும்பத்தின் அடுத்த வாரிசாகக் கருதப்படும் நாமல் ராஜபக்ஸ தன்னை பலப்படுத்திக் கொள்ளும் வரையிலும் அவர்கள் பொறுத்திருப்பார்கள்.

எனவே அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க அவர்களுடைய பதிலியாக முன்னிறுத்தப்படும் வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. ராஜபக்சக்கள் ரணிலுக்கு இடைஞ்சலாக மேலெழுவதைத் தடுக்க சனல் நாலு வீடியோ உதவக் கூடும்.

இதில் ஒரு வினோதமான அரசியல் சமன்பாடு உண்டு. அதன்படி ராஜபக்சங்களுக்கு எதிரானது ரணிலுக்குச் சாதகமானது. ஆனால் அடுத்த ஆண்டு ராஜபக்சகளின் பதிலியாகத்தான் ரணில் களமிறங்கக்கூடும். ஆயின் அதில் அவருக்குக் கிடைக்கக் கூடிய வெற்றி யாருடைய வெற்றியாக இருக்கும்? அது அவருடைய சொந்த வெற்றியா அல்லது ராஜபக்சக்களின் வெற்றியா?




எதுவாயினும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்சக்கள் களமிறங்குவதை குறிப்பிடத்தக்க அளவுக்கு அந்த வீடியோ தடுக்கக்கூடும். அதே சமயம் அந்த வீடியோ தமிழ் அரசியலில் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும்?

உடனடிக்கு அது கிழக்கில் பிள்ளையானுக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். எனினும் அங்கேயும் கூட பிள்ளையானுக்கு ஒரு சாதகமான இடம் உண்டு. ஒரு முஸ்லிம் அவரைக் காட்டி கொடுத்து விட்டார் என்பதைத் தமிழ் முஸ்லிம் உறவுகளைப் பாதிக்கும் விதத்தில் உருப்பெருக்கினால், அது கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிரான தமிழ் உணர்வுகளுக்குத் தலைமை தாங்கத் தேவையான பிள்ளையானின் தகைமையை மேலும் அதிகப்படுத்தக் கூடும். சீயோன் தேவாலயத்தில் கொத்தாகக் கொல்லப்பட்ட குழந்தைகளுக்கு யார் பொறுப்பேற்பார்கள்?



இது உள்நாட்டளவில் அதேசமயம் அனைத்துலக அளவில் நீதிக்காகப் போராடும் தமிழ் அமைப்புகளுக்கு அந்த வீடியோ சாதகமானது.தமிழ் மக்களால் ஏற்கனவே குற்றஞ் சாட்டப்படும் ஒரு குடும்பத்தை அந்த வீடியோ மேலும் அனைத்துலக அளவில் அம்பலப்படுத்தியிருக்கிறது. இலங்கைத்தீவின் அரசுக் கட்டமைப்பை அது அபகீர்த்திக்கு உள்ளாக்கியிருக்கிறது. ஏற்கனவே அமெரிக்கக் கண்டம் ராஜபக்சங்களுக்கு ஆபத்தான ஒரு கண்டமாக மாறி விட்டது.

அக்கண்டத்தில் உள்ள இரண்டு பெரிய நாடுகளான அமெரிக்காவும் கனடாவும் ராஜபக்சக்களுக்கு எதிராக நிர்ணயகரமான சில நகர்வுகளை முன்னெடுத்திருக்கின்றன. குறிப்பாக கனடா இரண்டு மூத்த ராஜபக்சங்களுக்கு எதிராகத் தடை விதித்திருக்கிறது. அவ்வாறு தடை விதிக்கப்பட்ட அதே காலப்பகுதியில், கடந்த மார்ச் மாதம் அமெரிக்கா ஒரு சட்டத்தை நிறைவேற்றியது. போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்கும் அச்சட்டத்தின் பிரகாரம் இரண்டு மூத்த ராஜபக்சகளுக்கும் அமெரிக்காவில் நெருக்கடியுண்டு. தவிர, அமெரிக்காவும் கனடாவும் சில ராணுவ அதிகாரிகளுக்கு பயணத் தடை விதித்திருக்கின்றன. குறிப்பாக, இலங்கைத் தீவின் ராணுவத் தளபதி மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி ஆகியோருக்கு எதிராகத் தடைகள் உண்டு. இவற்றுடன் கனடா இனப்படுகொலை தொடர்பில் தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது.



இவற்றுடன் கடந்த ஆண்டு ஐநா தீர்மானம் ஒன்றின் பிரகாரம் போர்க் குற்றங்கள் தொடர்பான சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான அலுவலகம் ஒன்று இயங்கி வருகின்றது. அதில் சேகரிக்கப்படும் சான்றுகளும் சாட்சியங்களும் என்றைக்கோ ஒருநாள் இலங்கைக்கு எதிராகப் பயன்படுத்தப் படக் கூடியவை.

மேற்கண்ட நகர்வுகள் யாவும் மேற்கத்திய பரப்பில் நிகழ்ந்தவை. இவற்றுடன் அண்மையில் இந்தியாவில், ராமேஸ்வரத்தில் வைத்து உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்த கருத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். இலங்கைத் தீவில் இடம் பெற்றது ஒரு பெரிய மனிதப் படுகொலை அல்லது இனப்படுகொலை என்ற பொருள்பட அவர் பேசியிருந்தார்.

இந்த வரிசையில் கடந்த வாரம் சனல் நாலு வீடியோவும் வெளி வந்திருக்கிறது. மேற்கண்ட அனைத்து விடயங்களும் நீதிக்கான போராட்டத்தில் தமிழ் மக்களுக்குப் பலம் சேர்ப்பவை. இலங்கைத்தீவின் அரசியல் கலாச்சாரம் பொறுப்பு கூறும் பண்புடையது அல்ல என்பதை தமிழ் மக்கள் உலக சமூகத்தின் முன் நிரூபிப்பதற்கு அவை உதவும்.

சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தலில் தர்மன் கனகரெட்ணம் வெற்றி பெற்றது தான் தாமதம். தமிழ்த்தேசியம் வளர்த்து விட்ட அடையாள அரசியலுக்கு மகிழ்ச்சியில் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. 75 ஆண்டுகால அகிம்சை.ஆயுத அரசியல் பிறவிப் பயன் கிடைத்த பெருமிதம்.

தமிழண்டா.... தமிழண்டா.... என்று தர்ம னில் ஆர்முடுகலில் தொடங்கி தமிழன் உலகை ஆளப்போகிறான் (ள்) என்று கமலா ஹரிஷில் அமர்முடுகலில் போய் ஓய்ந்திருக்கிறது. சிங்கப்பூர் சின்ன முத லாளிக்கும் அமெரிக்க பெரிய முதலாளி க்கும் பாலம் கட்டும் அனுமார் அரசியல். TAMILS FOR OBAMA TAMILS FOR KAMALA என்று தொடங்கி TAMILS FOR ELISABETH என்று மகாராணிக்கு செத்த வீடும் கொண்டாடிய தமிழண்டா.... இவர்கள்.

தர்மன் கனகரெட்ணம் வெற்றி பெற்ற செய்தி வெளிவந்த போது தமிழ் ஊடக ங்கள், சமூக ஊடகங்கள் வெளியிட்ட செய்தி பதிவுகளில் சில கவனத்திற் குரியவை.

சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தலில் தர்மன் கனகரெட்ணம் வெற்றி.

சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தலில் இந்திய.. இலங்கை வம்சாவழி தர்மன் கனகரெட் ணம் வெற்றி.



# தமிழண்டா! தமிழண்டா! குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்டம்!

சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தலில் இந்திய இலங்கை வம்சாவழி தமிழன் தர்மன் கனகரெட்ணம் வெற்றி.

சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தலில் இலங்கை வம்சாவழி யாழ்ப்பாண தமிழன் தர்மன் கனகரெட்ணம் வெற்றி.

இந்த செய்தியிடல் பாணி மக்களுக்கு சொல்லுகின்ற செய்தி என்ன..?

வாக்கியங்களும், வார்த்தைகளும் நீள்கின் றன. ஆனால் எங்கள் அடையாள அரசியல் ஒரு மனிதனை யாழ்ப்பாணத் தமிழனாக குறுக்கி அடையாளம் காண்பதில் மகிழ்ச்சிப் பெருமிதம் கொள்கிறது. எந்த அரசியல் பிரக்ஞையும் இல்லாமல் தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா என்ற கோஷம். இதுவே தமிழர் அரசிய லில் இருக்கின்ற வெறுமை வரட்சி. இதுவே தமிழ்த்தேசிய அரசியல் மக்களை கொண்டு விட்டுள்ள அரசியல் விளிம்பு. மானிடத்தை மறுத்த இந்த குறுகிய அரசியல் தமிழ்க் குறுந்தேசியவாதத்தின் ஒரு குறியீடு. தமிழை முதலிட்டு தமி ழையே இலாபமாகப் பெறும் அரசியல்.

தர்மன் கனகரெட்ணம் தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்திலும், மேற்குலகிலும் , சர்வதேசத்திலும் நன்கறியப்பட்டவர். பொருளாதார நிதி நிர்வாக நிபுணர். சர்வதேசநாணயநிதி, உலக பொருளாதார பேரவை போன்றவற்றில் முக்கிய புள்ளி. சிங்கப்பூ ரின் உதவிப் பிரதமராக, நிதி அமைச்சராக, மத்திய வங்கியின் நாணய சபையின் ஆளுனராக பதவிகளை வகித்த அவரின் அத்தனை தகுதிகளையும் மறைத்து வெறுமனே தமிழன் என்பதே ஒரு தகுதியாக காட்டப்படுகிறது.

சிங்கப்பூர் மக்கள் 70.4 வீதம் வாக்குகளை அளித்து அவரை தமிழன் என்பதற்காக தெரிவு செய்தார்களா? இல்லை அவரின் ஒட்டுமொத்த அரசியல் செயற்பாட்டிற்கும், தகுதிக்கும், திறமைக்கும் வாக்களித்தார் களா? இதை ஈழத்தமிழர் அரசியல் வறுமை அன்றி வேறு எவ்வாறு அழைப் பது.

இந்த கூட்டம் தான் புலம் பெயர்ந்த நாடு களின் அரசியலில் உள்ளவர்களை தமிழ ண்டா....தமிழண்டா என்று கொண்டாடு கிறது. மேற்குலக மக்கள் இவர்களுக்கு கட்சிக் கொள்கைக்காக வாக்களிக்கிறார் களா? அல்லது தமிழன் என்ற இன அடையாளத்திற்காக வாக்களிக்கிறார்களா?

ஆனால் புலம் பெயர்ந்த தமிழர்கள் இந்த அடையாளத்திற்காகவே ஊர் பார்த்து மதம் பார்த்து சாதிபார்த்து. சம்பந்தம் பார்த்து வாக்களிக்கிறார்கள் என்பது மட்டும் உண்மை. இது அம்பலமாகும் போது மேற்குலக மக்கள் இவர்களை நிராகரிக்கிறார்கள். நிராகரித்தும் இருக்கி றார்கள்.

இன்னொரு பக்கத்தில், இலங்கையின் சம கால அரசியல் பல விடயங்கள் பற்றி பேச கிறது. அரசியல் அமைப்பு மாற்றம். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு. இனப்பிரச்சினைக்கு தீர்வு. ஊழல்ஒழிப்பு. நீதி. நிர்வாகத்துறையின் சுதந்திரமான செயற்பாடு. மனித உரிமைகள் மேம்பாடு. ஜனநாயக அரசியல். இன, மத நல்லிணை க்கம். தேசிய பாதுகாப்பு. சீர்திருத்தங்கள்... இப்படி பல விடயங்கள் பேசப்படுகின்றன.

இலங்கைத் தலைவர்கள் காலத்துக்கு காலம். தேர்தலுக்கு தேர்தல் இலங்கையை சிங்கப்பூராக்குவோம் என்று கூறுவதற்கும் தயங்கியதில்லை. ஜே.ஆர்.ஜயவர்த்தன சுதந்திர வர்த்தக வலயம் அமைத்தார். பிரேமதாசா மேம்பாலங்கள் அமைத்தார். சிறிசேனா சிங்கப்பூர் நல்லாட்சி என்றார். ராஜபக்சாக்கள் தாமரைக்கோபுரம். போர்ட் சிற்றி என்றார்கள். இப்போது இலங்கை சிங்கப்பூர் தானே இல்லையா?

சிங்கப்பூரின் சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்பபை, அணுகுமுறையை, செயற்பாட்டை நோக்குவதே ஐதார்த்த த்தை உணர்த்தும். தமிழண்டா....என் பதை விடவும் ஒரு சிறுபான்மை சமூக த்தில் இருந்து தர்மன் கனகரெட்ணம் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவதற்கு சிங்கப்பூர் சமூக, பொருளாதார, அரசியல் சூழல் வழங்கிய வாய்ப்புக்கள் எவை என்பதை ஆராய்வது முக்கியம். இன் னொரு வகையில் கூறுவதானால் இலங்கை போன்ற ஒரு நாட்டில் இதை சாத்தியப்படாமல் தடுக்கின்ற காரணிகள் எவை என்பதை ஆராய்ந்து அறிவதே அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது.

சுமார் 6 மில்லியன் மக்களைக் கொண்ட சிங்கப்பூரில் 77 வீதமானோர் சீனர்கள். 14 வீதம் மலாயர். 8வீதம் இந்தியர். மத ரீதி யாக பார்த்தால் 31 வீதம் பௌத்தர்கள். 20 வீதம் மதமற்றவர்கள். 19 வீதம் கிறிஸ்த் தவர்கள்.16 வீதம் இஸ்லாமியர்கள், 5வீதம் இந்துக்கள். சில ஊடகங்கள் தர்மன் கனக ரெட்ணம் சிங்கப்பூரின் முதலாவது தமிழ் ஜனாதிபதி என்று காட்ட முற்படுகின்றன. இதில் உண்மை இல்லை . இதற்கு முன் னர் செல்லப்பன் ராமநாதன். இவர் எஸ்.ஆர். நாதன் என்று அழைக்கப்பட்ட வர் அடுத்தடுத்து (1999, 2005) இரு தடவைகள் 1999முதல் 2011 வரை ஜனாதி பதியாக பதவி வகித்தார்.

ஒரு வித்தியாசம் நாதன் எதிர் வேட்பாளர் இல்லாததால் தேர்தலின்றி போட்டியின்றி தெரிவானவர். இதன்படி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது தமிழர் தர்மன் கனகரெட்ணம் என்பதே சரி யானது. தற்போதைய ஜனாதிபதி கலிமா யாகூப் கூட 2017 இல் போட்டியின்றி தேர்தல் இன்றியே தெரிவு செய்யப் பட்டி ருந்தார். இவரே சிங்கப்பூரின் முதல் பெண் ஜனாதிபதி.

இங்கு ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரம் கொண்டவரல்ல. அதேவேளை ஜனாதிபதி அதிகாரம் எதுவும் அற்ற வெறும் ரப்பர் முத்திரை என்றும் கூறமுடியாது. இரண் டிற்கும் இடைப்பட்ட ஒரு அதிகார நிலை என்று கூறலாம். ஏனெனில் ஜனாதி பதிக்கு சில விடயங்களை தீர்மானிப்ப தற்கு வீட்டோ அதிகாரம் உண்டு. அரசியல் நியமனங்களைச் செய்வதற்கான அதிகாரமும் உண்டு. ஜனாதிபதி வேட்பா ளர் அரசில் அதி உயர்பதவி ஒன்றை அல்லது ஒரு தேசிய நிறுவனத்தில் தலைவர்பதவியை வகித்திருக்கவேண்டும். இது ஜனாதிபதி வேட்பாளருக்கான முக்கிய தகுதி.

சிங்கப்பூரின் முக்கிய நான்கு மொழிகளும் மலாய், சீன, தமிழ், ஆங்கில மொழிகள் நிர்வாகமொழிகளாக உள்ளன. உள்ளன என்றால் வெறும் காகிதத்தில் அல்ல நடைமுறையில். மொழிகளுக்கு இடையே சம அந்தஸ்த்து பேணப்படுகிறது. இதை அரசியல் அமைப்பு சட்டம் உறுதிப்படுத் துகிறது. அதன்படி நடைமுறைப்படு த்தப்படுகிறது.

இங்கு 80 வீதமான மக்கள் அரச குடி யிருப்புக்களில் வசிக்கின்றனர். அவை குறிப்பிட்ட இனம், மதம், மொழிக்கான தனித்துவமானவை அல்ல. சமூக பன் முகத்தன்மையை பேணும் வகையில் குடியிருப்புக்கள் பகிர்ந்தளிக்கப்படுகின் றன. இதன் மூலம் சமூகங்களுக்கு இடை யில் ஒற்றுமையிலும் வேற்றுமை பேணப் படுகிறது. சமூகங்களுக்கு இடையிலான அங்கீகாரம், புரிந்துணர்வு, சகவாழ்வு , ஒருங்கிணைந்த வாழ்வு இயங்குநிலையில் இருக்கிறது. எவரும் குறிப்பிட்ட மதத்த வராக இருப்பதற்கும் அதை அனுட்டி ப்பதற்கும் பூரண சுதந்திரம் உறுதிப்படு த்தப்படுகிறது.

சிங்கப்பூரில் பல்கலாச்சாரமும், திறமையின் அடிப்படையிலான கல்வி, தொழில்வாய்ப் பும் மிகவும் முக்கியமான சமூகப்பண்பு கள். ஊழலும், இலஞ்சமும் மிகமிக குறை வான ஒரு தேசம். குற்றச் செயல்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்ப கிறது. போதைவஸ்து குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. பகிரங்கமாக பொதுவெளியில் பிச்சை எடுப்பது குற்றம். குற்றம் நிரூபிக்கப் பட்டால் தண்டம் மூவாயிரம், இரு வருடம் வரை சிறைத்தண்டனை விதிக் கப்படுகிறது. அரசு, நீதி, நிர்வாகத்துறை கள் சுயாதீனமாக செயற்படுகின்றன. இவை இலங்கையில் சாத்தியமா? இந்த அடிப் படைகள் இல்லாமல் சிங்கப்பூராக்குவது என்பது வெறும் கட்டிடக்காராக்குவது என்று இலங்கைத்தலைவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

சிங்கப்பூர் ஒரு நடுநிலையான நாடு. சர்வ தேச அமெரிக்க, ரஷ்ய, பிராந்திய சீன,

கட்டுரையாளர்:-
– அழகு.குணசீலன் –

இந்திய அதிகார சதுரங்கங்களுக்குள் சிக்காமல் இருப்பதை கொள்கையாகக் கொண்டுள்ளது. சிறிய ஒரு சுப்பர்மாநகர நாடு என்ற வகையில் சர்வதேச முக்கியத்துவத்துவம் பொருளாதாரம் சார்ந்ததாகவும், பிராந்திய முக்கியத்துவம் வெளியுறவுக் கொள்கை சார்ந்ததாகவும் உள்ளது. இதனால் தான் தகுதியின் அடிப் படையில் துறைசார் நிபுணர்களான ஆளுமைமிக்கவர்கள் அமைச்சரவையில் இடம் பெறுகின்றனர்.

தற்போது 99 எம்.பி.களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 88 பேர் தொகுதி வாரியாக மக்களால் நேரடி ஜனநாயக வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யப்படுவர். வாக்குரிமைக்கான வயது 21. 11 பேர் நியமன எம்.பி.கள் ஆகக் கூடியது 12 பேரை ஜனாதிபதி நியமிக்க முடியும். கட்சிகளின் மொத்தவாக்கு, பிரதிநிதித் துவம் அற்ற சமூகங்களில் இருந்து இவர்கள் நியமிக்கப்படுகின்றனர். நியமன எம்.பி.கள் மக்களால் நேரடியாகத் தேர்வு செய்யப்படாதவர்கள் என்பதனால் பாராளு மன்ற வாக்கெடுப்புக்களில் வாக்களிக்கின்ற உரிமை கிடையாது. கருத்துரிமை உண்டு.

ஜனாதிபதி அரச தலைவராக செயல்படு வார். பிரதமர் அரசாங்கத்தின் அமைச்ச ரவையின் தலைவராக செயற்படுவார். ஜனாதிபதி பதவியில் இருக்கும் போது எந்த ஒரு கட்சியையும் சாராதவராக இருக்கவேண்டும். கட்சி அங்கத்தவர் உள்ளிட்ட அனைத்து பதவிகளையும் துறக்க வேண்டும்.

சிங்கப்பூர் சுதந்திரம் பெற்ற 1965 இல் இருந்து PAP மக்களின் செயல் கட்சியை ஆட்சியில் தொடர்ந்தும் இரு க்கிறது. இது ஒரு ஒற்றை கட்சி ஆட்சி யாக விமர்சிக்கப்படுகிறது. பல சிறிய கட்சிகள் கூட்டணியாக செயற்பட்ட போதும் பத்துக்கும் மேற்பட்ட கட்சிகள் உள்ள போதும் ஆட்சியை அமைக்க முடியவில்லை. சிங்கப்பூர் அரசு அதி பல மான அரசாங்கத்தையும், மிகவும் பலவீன மான எதிர்க்கட்சியையும் கொண்டது. இது சிங்கப்பூர் ஜனநாயகத்தை கேள்வி க்கு உட்படுத்தும் ஒன்றாகும்.

கட்சிகளின் பெயர்களில் எந்த இன, மத, மொழி சமூக அடையாளங்கள் இல்லை. மக்கள், லிபரல், தொழிலாளர், முற்போக்கு என அரசியல் வார்த்தைகளே உண்டு.இது சிங்கப்பூரின் சமூகங்களுக்கு இடையிலான ஐக்கியத்திற்கு சாதகமான ஒன்றாக அமை கின்றது.

ஸ்திரமான ஆட்சி, வெளிநாட்டுக் கடன் கள் அற்ற ஒரு அரசு, வரவு செலவுத் திட்டம் எப்போதும் மிகையானது. அரச செலவுகளை விடவும் அரச வருமானம் அதிகமானது. இதுவே சிங்கப்பூரின் இராட்சத பொருளாதார பலம். பொருளா தாரம் மிகவும் வளர்ச்சி அடைந்தது. மின்னியல் பொருட்கள், இயந்திரங்கள் ஏற்றுமதி வர்த்தகம், சர்வதேச நிதிச் சந்தை, உல்லாசப் பிரயாணம், சரக்கு கப்பல் போக்குவரத்து என்பன சிங்கப்பூர் பொருளாதாரத்தின் முதுகெலும்பு.

இத்தனை அரசியல் பொருளாதார உறுதியை கொண்டுள்ள போதும் சமூக ஏற்றத்தாழ்வு, வெளிநாட்டு தொழிலாளர்

(22ம் பக்கம் பார்க்க)

# இலங்கை அரசியல் இனவாதத்தில் இருந்து மீளாதா?




கட்டுரையாளர்:-
கிளிநொச்சியில் இருந்து
- கருணாகரன் -



இலங்கை அரசியல் இனவாதத்திலிருந்தும் இன அடையாளத்திலிருந்தும் மீளாதா? இனப்பிரச்சினைக்கு முடிவு வராதா? தீர்வு கிடைக்காதா? இன வெறிக் கூச்சல்கள் அடங்காதா என்று புலம் பெயர் நாடொன்றிலிருந்து வந்த ஒரு இளைஞர் சில நாட்களுக்கு முன்பு கேட்டார்.

அவருடைய கண்களில் பெரிய ஏக்கம் நிறைந்திருந்தது. அவர் காண விரும்புவது வேறொரு இலங்கையை. வேறொரு அரசியற் களத்தையும் அரசியல் பண்பாட்டையும். இன சமத்துவமும் பல்லினத்தன்மைக்குரிய இடமும் ஐக்கியமும் அமைதியும் தேசத்தின் மீதான அக்கறையும் கொண்ட சூழலை அவர் விரும்புகிறார் என்பதை அவருடன் தொடர்ந்த உரையாடலின்போது உணர்ந்தேன்.

உலகம் எப்படி மாறிக் கொண்டுள்ளது. யாரென்றே தெரியாத மனிதர்களுடன் நெருக்கமாகி உறவாகிறோம். நமக்கு முற்றிலும் புதிய தேசங்களில் யாரென்றே தெரியாத நிலையில் போய் வேரூன்றி வாழ்கின்றோம். எந்த உத்தரவாதத்தில் அங்கெல்லாம் போகிறோம்! அங்கே சக மனிதருக்கான இடமும் வாழ்வதற்கான உத்தரவாதமும் கிடைக்கும் என்பதால் தானே!

அது ஏன் எங்களுடைய நாட்டில் (நாம் பிறந்த மண்ணில்) மட்டும் இல்லாமல் போகிறது? இந்த அரசியல்வாதிகள் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்கிறார்களே. அங்கே போய் எதைப் பார்க்கிறார்கள்? எதைப் படிக்கிறார்கள்? அங்கெல்லாம் இன, மத, சாதி(?) நிற, மொழி வேறுபாடுகளைக் கடந்து மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். இதைப் பார்க்கும் போது தங்களை நினைத்து இவர்கள் வெட்கப்படுவதில்லையா?

ஏன் நம்முடைய பிரமர், ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் எனத் தலைவர்கள் நாடு நாடாகச் சுற்றுப் பயணம் போய் வருகிறார்களே! அந்த நாடுகளைப் பார்த்து கொஞ்சமாவது கற்றுக் கொள்ள வேண்டாமா? அங்கே பேதங்களுக்கும் வேறுபாடுகளுக்கும் இடமிருப்பதில்லை. சட்டமும் அரசாட்சியும் ஒன்றாகவே இருக்கின்றன என்பதையாவது புரிந்து கொள்ள முடியாமல் ஏனிருக்கிறார்கள்? இனவாதத்தையும் மதவாதத்தையும் மனதுக்குள்ளும் தலைக்குள்ளும் வைத்துக் கொண்டு எப்படி ஜனநாயத்தைப் பற்றிப் பேசுகிறார்கள்? எப்படி உலகத்துடன் கைகுலுக்குகிறார்கள்? இது என்ன காட்டு மிராண்டி யுகமா? அல்லது நம்மை மட்டுமல்லாமல் உலகத்தையும் ஏமாற்றுகிறார்களா என்று சற்று உரத்த தொனியில் ஆக்ரோஷமாகக் கேட்டார்.

அவருடைய கேள்வி நியாயமானது. இதே கேள்விகள் என்னிடத்திலும் எழுந்திருக்கின்றன. இன்னும் பலரிடத்திலும் இவை போலப் பல கேள்விகள் இருக்கலாம். ஆனால் இந்தக் கேள்விகளை நாம், நம் நம்முடைய அரசியல்வாதிகளிடமும் தலைவர்களிடமும் கேட்க வேண்டும். நம்முடைய ஊடகங்களிடமும் ஊடகவியலாளர்களிடத்திலும் கேட்க வேண்டும். மாற்றாளர்கள் விலக்கு.

மாற்றாளர்கள் விலக்கு என்பது ஏனென்றால் அவர்கள் இனவாதத்துக்கும் இங்கே நிலவுகின்ற அரசியற் போக்குக்கும் எதிராக மாறாகச் சிந்திப்பவர்கள். அவர்கள் யதார்த்தத்தை உணர்ந்து, அதன்படியே அரசியலை மேற்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்கள். ஆனால், அவர்களுடைய கருத்தையும் நிலைப்பாட்டையும் பெருந்திரள் சமூகமும் அதைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் தரப்புகளும் ஏற்றுக் கொள்வதில்லை.

ஆகவே அவர்கள் இதில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள். ஆனால், ஏனைய பெருந்திரளாளர்கள் இதற்குப் பதில் அளிக்க வேண்டும். பொறுப்புச் சொல்லவும் பொறுப்பு ஏற்கவும் வேண்டும். அவர்கள் அனைவரும் ஆளையாள் குற்றம் சாட்டிக் கொண்டு ஏட்டிக்குப் போட்டியாக இனவாதத்தை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள். இனவாதம் அழியக் கூடாது என்று செயற்பட்டுக் கொண்டிருப்பவர்கள். தவறு, பிழை, குற்றம் என்றெல்லாம் தெரிந்து கொண்டே அதை எந்தக் குற்றவுணர்ச்சியும் இல்லாமற் செய்து கொண்டிருப்பவர்கள். மக்களிலும் பெரும்பாலானோர் அப்படித் தான் செயற்படுகிறார்கள். தவறான பொருத்தமற்ற அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள், அரசியற் தலைவர்கள் என்று நன்றாகத் தெரிந்து கொண்டே அதற்கு ஆதரவளிப்பவர்கள். கட்சி அபிமானம், தலைமை மீதான பிடிமானம், இன மானம் போன்ற காரணங்கள் இவர்களுடைய அறிவுக் கண்ணைக் குருடாக்கி விடுகின்றன.

ஆனால் அந்த இளைஞர் கேட்கும் கேள்விகளும் அவருடைய மனதிலே எழுகின்ற கோபமும் நியாயமானது. அந்த நியாயத்துக்கு இங்கே உரிய இடமில்லை. இந்தக் கேள்விகளுக்கும் பதில் கிடையாது. இதிலே துயரமான வேடிக்கை என்னவென்றால் இனவாதத்தையும் மதவாதத்தையும் வளர்த்துக் கொண்டு, மக்களுக்கு விரோதமாகச் செயற்படுகின்றவர்களையே மக்களும் தமது அரசியல் தலைவர்களாகவும் அரசியற் பிரதிநிதிகளாகவும் தெரிவு செய்வது தான். இனவாதம், மதவாதம் மட்டுமல்ல, ஊழல் முறைகேட்டைச் செய்கின்றவர்களையும் மக்கள் தான் ஆதரித்து வெற்றியடையச் செய்கிறார்கள். இதையெல்லாம் கேள்விக்குட்படுத்தாமல், கேள்விக்குட்படுத்தத் தயாரில்லாமல் இருக்கின்ற ஊடகக்காரர்களும் ஊடகங்களும் இதில் சேர்த்தி. இதுதான் இலங்கையின் துயரமும் அவலமும்.

இதற்கு அடிப்படையாகச் சில விடயங்கள் உண்டு. ஒன்று, சிங்கள அரசியற் தலைவர்கள் மதத்துக்குக்கும் மதவாதிகளுக்கும் கட்டுப்பட்டிருப்பதாகும். இலங்கையில் மொழியும் மதமும் இரண்டறக் கலந்தது என்பர். சைவமும் தமிழும். சிங்களமும் பௌத்தமும். ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாத அளவுக்கு பிணைந்திருப்பவை. இதனால் தெரிவு செய்யப்படும் அரசியற் தலைவர்கள் மதபீடங்களுக்குச் சென்று ஆசி பெறுவதும் வழிபடுவதும் முதற் பணியாகிறது.

அதற்குப் பிறகு தான் ஆட்சி பரிபாலனமும் அரசியற் பணியும் மக்கள் தொண்டும். இதொரு வழமையாகி விட்டது. மன்னர் காலத்துப் பாரம்பரியத்தை இந்த ஜனநாயக யுகத்திலும் அப்படியே பின்பற்றுகிறார்கள். இதனால் மதபீடங்களையும் மதக் கட்டுமானங்களையும் இவர்களால் கடந்து செல்ல முடிவதில்லை. இதனால் தான் இலங்கையின் அரசியலமைப்பும் பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

பௌத்தத்துக்கு முன்னுரிமை என்று சொன்னால் ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இலங்கையில் பௌத்தத்தை பின்பற்றுகின்றவர்கள் தனியே சிங்களர் மட்டுமே. ஆகவே சிங்கள பௌத்தவாதமாக இது திரட்சியடைந்துள்ளது. இதற்கு அரசு தலைமை தாங்குவதால் ஏனைய மதத்தையும் மொழியையும் பேசும் மக்களின் நிலை கேள்விக்குள்ளாகிறது.

சிங்கள பௌத்தத்தைப் போல மிகப் பிற்போக்குத்தனமான மதக் கட்டுப்பெட்டித்தனங்கள் இல்லை என்றாலும் முஸ்லிம்கள், பள்ளிவாயல்களையும் அவற்றின் சம்மேளத்தையும் கடந்து நிற்றமுடியாதவர்கள். அப்படித் தான் தமிழ்க்கட்சிகளும் மலையகக் கட்சிகளும். ஆனால் அவை மதத்துக்குள் கட்டுப்பட்டிருக்காமல் வேறொரு நிலையில் கட்டுப்பட்டுள்ளன. என்பதால் தான் இந்தக் கட்சிகள் எல்லாமே இனக் கட்சிகளாகச் சுருங்கிக் கிடக்கின்றன. இதைப்பற்றி விவாதிக்கும் போது அரசும் சிங்களத் தரப்பும் இனவாதத்தைப் பிரயோகிப்பதனால் தாமும் தவிர்க்க முடியாமல் இன ரீதியாகவே திரட்சியடைய வேண்டியுள்ளது. அவர்கள் (சிங்கள மக்கள்) சிங்களத் தேசிய வாதத்தை மேலுயர்த்தும்போது தவிர்க்க முடியாமல் நாமும் தமிழ்த்தேசிய வாதத்தையே நிலை நிறுத்த வேண்டியுள்ளது. அப்படித்தான் முஸ்லிம் தேசியவாதமும் மலையகத் தேசியவாதமும் என்று சொல்லப்படுகிறது.

மேலோட்டமாகப் பார்த்தால் இது சரி போலவே தோன்றும். அதற்கான பகுதி அளவு நியாயங்களும் உண்டு. ஆனால், இது தவறு. ஏனென்றால் இந்த எதிர்த்தேசியவாதம் என்பது தேசியத் தன்மையோடு உருவாகவும் இல்லை. அப்படிக் கடைப் பிடிக்கப்படவும் இல்லை. சிங்கள இனவாதத்துக்குப் பதில் தமிழினவாதம். சிங்கள + தமிழ் இனவாதத்துக்குப் பதில் முஸ்லிம் இனவாதம். அவ்வளவுதான்.

இதில் சிங்கள இனவாதம் சற்றுக் கூர்மையாக உள்ளது. காரணம், அது அரசு, அதன் வளங்கள், படைத்துறை, பெரும்பான்மை என்ற அதிகார எல்லைகளை உச்சமாகக் கொண்டிருப்பதால் கூரானதாக உள்ளது. அடுத்தபடியாக தமிழினவாதம் இருந்தது. இப்பொழுது தமிழ்த்தரப்பின் பலம் குறைவடைந்துள்ளதால் அதனுடைய எல்லைகள் மட்டுப்பட்டுள்ளன. முஸ்லிம் இனவாதம் அதற்கும் கீழே உள்ளது. இனவாதத்துக்கும் தேசியவாதத்துக்கும் இடையிலான வேறுபாட்டைப் பலரும் உணர்ந்து கொள்வதில்லை. இதனால் இரண்டையும் ஒன்றாகப் போட்டுத் தாமும் குழம்பி, மற்றவர்களையும் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். இனவாதத்தில் ஜனநாயகத்துக்கான இடமே இருக்காது. தேசியவாதத்தில் (அதுவும் ஒரு கற்பிதம்தான் என்றபோதும்) அதற்குள் ஒப்பீட்டளவில் ஒரு சுதந்திர வெளி உண்டு. ஜனநாயகம் அதற்கான வெளியை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இதனால் அது உள்ளும் புறத்தும் திறந்தே காணப்படும். அதனுடைய பலமே அது தான். எந்தத் தயக்கமும் தடுமாற்றமும் அதற்குக் கிடையாது. அது மற்ற இனங்களைக் கண்டு அஞ்சாது. தன்னுடைய வெளிப்படைத் தன்மையிலும் ஜனநாயக வேரின் பலத்திலும் அது நிமிர்ந்து நிற்கும்.

ஆனால், இனவாதம் அப்படியானதல்ல. அது எப்போதும் பிறரைச் சந்தேகிக்கும். பிறரைக் குறித்து அச்சமடைந்து கொண்டேயிருக்கும். இதனால் பிறரை எப்போதும் எதிரியாகவும் எதிர்த்தரப்பாகவுமே கருதிச் செயற்படும். எதையும் முரண்நிலை நின்றே நோக்கும். அதனுடைய குணமே அதுதான். அதற்குச் சமாதானத்தின் மீது ஈடுபாடோ நம்பிக்கையோ திருப்தியோ ஏற்படாது. எப்பொழுதும் அது எதிர்த்தரப்பைக் குற்றம் சாட்டிக்கொண்டேயிருக்கும். அதில் திருப்தி காண்பதே அதன் முழுமையான ஈடுபாடு. அதுவே தன்னுடைய பலம் எனக் கருதிக் கொண்டிருக்கும். இதனால் எந்தப் பயனும் இல்லை என்பதைப் பற்றிய ஆய்வோ அறிதலோ அதற்குக்கிடையாது. அதை அது பொருட்படுத்திக் கொண்டிருப்பதும் இல்லை. அதற்கு எதிர்த்தரப்பின் மீது குற்றம் சுமத்திக் கொண்டும் எதிர்த்தரப்பை எதிர்த்துக் கொண்டுமிருக்க வேண்டும். அதுவே தன்னுடைய பணி எனக் கருதிக் கொண்டிருக்கிறது. இனவாதம், நிறவாதம், மனவாதம் அனைத்தினதும் பொதுக்குணம் இதுவாகும்.

இதையெல்லாம் தெரிந்து கொண்டே பலரும் தெரியாததைப்போல தவறிழைக்கிறார்கள். எனவே தான் இவர்கள் வரலாற்றின் குற்றவாளிகள். குப்பைக் கூடைக்குள் தள்ளப்பட வேண்டியவர்கள் என்கிறோம்.

இலங்கையின் தொடரப்படுகின்ற இனவாதமே இலங்கையைச் சீரழித்தது என்று அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இதற்குக் காரணமானவர்களையும் தெரியும். ஊழல்வாதிகள், இனவாதிகள், சமாதானத்துக்கும் தீர்வுக்கும் எதிரானவர்கள் என்றும் தெரியும். இதற்கெல்லாம் காரணமான கட்சிகள் எவை என்றும் தெரியும். ஆனாலும் மக்கள் இன்னும் இனியும் அவர்களைச் சார்ந்தும் அந்தக் கட்சிகளை ஆதித்துக் கொண்டுமே இருக்கிறார்கள். அடுத்து வரப் போகின்ற தேர்தல்களிலும் இப்படியான சக்திகள் தான் வெற்றியடையக் கூடிய நிலை உண்டு. அப்படியென்றால் எங்கே தவறுண்டு? எதற்காக மக்கள் இப்படித் தவறிழைக் கிறார்கள்?

இலங்கை மக்களும் சரி, அரசியல் தலைவர்களும் சரி, ஊடகங்களும் சரி அனைத்துத் தரப்புமே தற்காலத்தில் நவீன யுகத்தில் வாழவில்லை. அவர்கள் இந்த யுகத்தின் பிரதிநிதிகள் கிடையாது. தற்காலத்தில் உயிரோடிருந்தாலும் அவர்கள் வாழ்வது பல நூறாண்டுகளுக்கு முன்பான காலத்திலேயே. அந்தப் பழைய யுகத்தின் பிரதிநிதிகளாகவே அவர்கள் செயற்படுகிறார்கள்.(22ம்பக்கம் பார்க்க)

உயிர்த்த ஞாயிறு தின தாக்குல்கள் தொடர்பான இரகசியங்களை அம்பலப்படுத்தும், சனல் 4 ஆவணப்படமும், அதில் பகிரப்பட்டுள்ள தகவல்களும், பலரது நிலையை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

குறிப்பாக ராஜபக்ஷவினரின் எதிர்காலம் இந்த ஆவணப்படத்தினால் நிச்சயம் பாதிக்கப்படும். அதுபோல மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேவின் நிலையும் சிக்கல் தான். இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் (பிள்ளையான்) கூட எதிர்காலத்தில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ள வாய்ப்புகள் உள்ளன.

இந்த மூன்று தரப்புகளும் அல்லது இவர்களுக்கு ஆதரவான தரப்புகள் மட்டும் தான் இப்போது, சனல் 4 ஆவணப்படத்தை கழுவி ஊற்றும் வேலையை செய்து கொண்டிருக்கின்றன.

ராஜபக்ஷவினரின் மீது பரம்பரை பகையை வெளிப்படுத்தியுள்ளது சனல் 4 என்ற வகையில் தான் நாமல் ராஜபக்ஷவும், கோட்டாபய ராஜபக்ஷவும் கருத்து வெளியிட்டிருக்கின்றனர். ஆனால் அவ்வாறான பரம்பரைப் பகை, எதற்காக ராஜபக்ஷ குடும்பத்தினர் மீது சனல் 4இற்கு ஏற்பட வேண்டும் என்பது முக்கியமான கேள்வி.

குற்றச்சாட்டுகளில் இருந்து தப்பிக்க, கொடுக்கப்படுகின்ற ஒருவகை பதிலடி தான் இந்த பரம்பரைப் பகை என்ற

சனல் 4 ஆவணப்படம் வெளியாவதற்கு முன்னர், ஒரு 5 நிமிட முன்னோட்டக் காணொளி வெளியானது. அது வெளியானதுமே, அமைச்சர் மனுஷ நாணயக்கார சனல் 4 குற்றச்சாட்டுகள் குறித்து பாராளுமன்றத் தெரிவுக்குழுவை அமைத்து



விசாரணை நடத்த அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தார்.கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த போது, ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கும் இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கும் தொடர்புகள்

தாலும், இப்போதைக்கு அரசாங்கமாக பதிலளிக்கத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் ஜனாதிபதி இருப்பதாக தெரிகிறது. ஏனென்றால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் முதலில் அதற்குப் பதிலளிக்கட்டும் என்பது அவரது நிலைப்பாடு.

ராஜபக்ஷவினர் அவ்வாறு இருந்தாலும், சுரேஷ் சாலே மற்றும் பிள்ளையான் விடயத்தில், அரசாங்கம் பதிலளிக்க வேண்டும். ஏனென்றால் அவர்களை அரசாங்கம் பதவிகளில் வைத்திருக்கிறது.

விதைக்கப்பட்டிருக்கிறது.இவ்வாறான நிலையில், நாளை தொடங்கவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடருக்கு முன்னர் சனல் 4 போட்ட குண்டு தான் இது என்ற கருத்து அரசாங்கத் தரப்பிலுள்ள ராஜபக்ஷ ஆதரவாளர்கள் மத்தியில் இருக்கிறது.

ஆனால், சனல் 4 ,இந்த ஆவணப்படத்தை கடந்த ஆகஸ்ட் 15ஆம் திகதியே வெளியிடத் திட்டமிட்டிருந்தது. மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே சட்ட நடவடிக்கைகளை எடுத்ததால் தான், அது ஜெனிவா கூட்டத்தை அண்டி வெளியிட

கட்டுரையாளர்
தமிழகத்தில் இருந்து
கேணல் ஹரிகரன்



ப்படும் நிலை ஏற்பட்டது. ஆக ஜெனிவா கூட்டத்தொடரை அண்டி இதனைக் கொண்டு வந்து நிறுத்தியது சுரேஷ் சாலே தானே தவிர, சனல் 4 அல்ல.

அதை விட இந்தமுறை ஜெனிவா கூட்டத்தொடரை அரசாங்கம் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இம்முறை இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளரின் எழுத்து மூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டாலும், வாக்கெடுப்புகள் எதுவும் இடம்பெறாது.

இந்தக் கூட்டத் தொடருக்கு அரசாங்கம் உயர்மட்டக் குழுவையே அனுப்பாத நிலையில், சனல் 4 ஆவணப்படத்தை வெளியிட்டு பிரச்சினையை எழுப்புகிறது என்பது வீண்வாதம். இந்த ஆவணப்படத்தில் தன் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே நிராகரித்திருக்கிறார்.

புத்தளம் கரடிப்பூ வலில் 2018 பெப்ரவரி மாதம், சஹ்ரான் குழுவினருடன் சந்திப்பில் பங்கேற்றதாக அசாத் மௌலானா கூறியிருந்த நிலையில், அந்தக் காலப் பகுதியில் தான் மலேசியாவில் இருந்ததாக குறிப்பிட்டிருக்கிறார் மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே. 2016 தொடக்கம் 2018 வரை அவர், மலேசியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் பணியாற்றியிருந்தார்.

அதுபோலவே, 2019இல் குண்டுவெடிப்பு நிகழ்ந்த (22ம் பக்கம் பார்க்க)

# சனல் 4 வெளிப்படுத்தல்:- அடுத்தது என்ன?

விடயம். ஆனால் இந்த ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் பாரதூரமானவை. எதிர்காலத்தில் ராஜபக்ஷவினர் மீது மேற்குலக நாடுகளில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்குக் கூட காரணமாக அமையலாம். ஏற்கனவே மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிராக கனடா பயணத் தடை விதித்திருக்கிறது.

இந்த தடைக்குப் பின்னால் அசாத் மௌலானா நிசாந்த டி சில்வா போன்றவர்களின் சாட்சியங்கள் இருந்திருக்கக் கூடும். ஏனென்றால் அவர்களின் சாட்சியங்கள் பல மாதங்களுக்கு முன்னரே, ஐரோப்பிய புலனாய்வு அமைப்புகளால் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஐ.நாவிலும் சாட்சியங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன.

அதன் அடிப்படையில் தான் ராஜபக்ஷ சகோதரர்கள் இருவர் மீதும் கனடா நடவடிக்கை எடுத்திருக்கலாம். அதனை பிரித்தானியாவும் பின்பற்றும் என முன்னர் தகவல்கள் வெளியானதும் நினைவிருக்கலாம். வரப்போகும் ஜெனிவா கூட்டத் தொடருக்குப் பின்னர், பல நாடுகள் அத்தகைய முடிவுகளை எடுத்தால் ஆச்சரியமில்லை.

ஆனால் உள்நாட்டில், ராஜபக்ஷவினருக்கு எதிரான விசாரணைகள் அல்லது நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமா என்பது சந்தேகம் தான். ஏனென்றால் அரசாங்கம் அவர்களின் கையில் தான் இருக்கிறது.

அதனால் தான், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை , பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா போன்ற பலரும் இந்த சதித் திட்டம் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

உள்நாட்டில் முறையான, சரியான விசாரணை நடத்தப்படவே முடியாது, அதற்கு வாய்ப்பே இல்லை, சர்வதேச விசாரணையே ஒரே வழி என்ற கருத்து தென்னிலங்கையில் வலுவடைந்திருக்கிறது.

இது தமிழர்களின் ஒன்றரை தசாப்த சர்வதேச விசாரணைக் கோரிக்கையின் மீதான நியாயத்தை மேலும் வலுப்படுத்துகிறது. ஆனால் அரசாங்கம் சர்வதேச விசாரணைக்கு இணங்குமா என்ற கேள்வி இருக்கிறது.

இருப்பதாக, பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார, நளின் பண்டார, ஹரின் பெர்னாண்டோ போன்றவர்களும், அருட்தந்தை சிறில் காமினியும் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தனர்.

இதையடுத்து, தன் மீது குற்றச்சாட்டு சுமத்திய அருட்தந்தை சிறில் காமினிக்கு எதிராக, மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே, 50 மில்லியன் ரூபா இழப்பீடு கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

அப்போது அரசாங்கத்தின் மீது குற்றம் சாட்டிய மனுஷ நாணயக்கார, பாராளுமன்றத் தெரிவுக் குழு அமைத்து விசாரணை நடத்த அமைச்சரவை தீர்மானித்திருப்பதாக இப்போது அறிவித்துள்ள போதும், அமைச்சரவைப் பேச்சாளரான பந்துல குணவர்தன, அவ்வாறான எந்த விடயமும் பேசப்படவில்லை என்று கூறியிருக்கிறார்.

சனல் 4 ஆவணப்பட விவகாரத்தில் அரசாங்கத்துக்குள் இருக்கும், ராஜபக்ஷவினரின் விசுவாசிகள் மட்டும் தான், கொந்தளிக்கின்றனரே தவிர, ரணில் விக்கிரமசிங்க ஆதரவாளர்கள் அமைதியாக கடந்து செல்லவே விரும்புகின்றனர்.

ஏனென்றால், சனல் 4 குட்டையைக் குழப்பி விட்டது, அவர்களுக்குச் சாதகம் தான். சில மாதங்களுக்கு முன்னர் வரை, ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தும் எண்ணத்தில் இருந்த பொதுஜன பெரமுன இப்போது, தங்கள் கட்சியின் வேட்பாளர் தான் போட்டியிடுவார் என்றும், ராஜபக்ஷவினர் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றுவார்கள் என்று அறுதியிட்டுக் கூறி வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் ராஜபக்ஷவினர் மீது குற்றம் சாட்டி அவர்களின் செல்வாக்கை அழிக்கக் கூடிய இந்த சனல் 4 வீடியோ ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவரது தரப்பினருக்கும் சாதகமான ஒன்று தான். அதனால், இந்த விடயத்தை பொறுத்திருந்து நிதானமாக கையாளுவதற்கே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விரும்புவார்.

அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவுக் குழு அமைத்து விசாரிக்கப் போவதாக கூறினாலும், அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தேவைப்பட்டால் சர்வதேச விசாரணைக்கும் தயார் என்று கூறியிருந்

அவர்களுக்கு எதிராக விசாரணையை நடத்த வேண்டும், அதுவரையாவது பதவியில் இருந்து இடைநிறுத்த வேண்டும். ஆனால் அரசாங்கம் இந்த இரண்டையும் இதுவரை தீர்மானிக்கவில்லை.

அதேவேளை, போர்க்குற்றங்களை அம்பலப்படுத்தியதால் தென்னிலங்கையில் எப்போதுமே சனல் 4 மீது ஒரு காழ்ப்புணர்வு இருக்கிறது. சனல் 4 பொய்யைப் பரப்புகிறது என்ற கருத்து அங்கு

சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com


கனடாவின் மதிப்பு மிக்க எழுத்தாளர்
"வீணைமைந்தன்" கே.ரி. சண்முகராஜா
அவர்கள் எழுதிய நான்கு புத்தகங்களின்
அறிமுக விழா
"தமிழ் சினிமாவும் நடிகர் திலகமும்"
நடிகர் திலகம் ஐயாவின் 95 வது பிறந்தநாள் வெளியீடு
யாழ்ப்பாணம் மொன்றியால் நகரங்களில் வெளியான
வீணைமைத்தனின்
"மண்ணும் மனசும்"
"தமிழ சினிமாவில் மகாகவிபாரதி பாடல்கள்"
"மறக்கத்தெரியாத மனசு"
இடம் : தூயதாய் ஆரோக்கிய அன்னை ஆலய அரங்கு
காலம் : 23.09.2023 சனிக்கிழமை மாலை 6 மணி
அரங்கு முகவரி :131. BIRCHMOUNT ROAD,
TORONTO (ONT) MIN3J7
தொலைபேசி
438 779 9697
416 732 1608
அனைவரும் வாருங்கள்,
நல்லாதரவு தாருங்கள்
வாசியுங்கள் ! நேசியுங்கள் !


Friends
MATRIMONY
உங்கள் திருமணத்
தேடலுக்கோர் முற்றுப்புள்ளி...
10,000க்கு மேற்பட்ட
வரன்கள் கைவசமிருப்பில்!
10,000+
இலங்கைத் தமிழர்களுக்கான
உலகளாவிய திருமண இணையத்தளம்.
Bachelor Degree, Master Degree, PHD, Single
(FMID 120268)
Bachelor Degree, Master Degree, PHD Single
(FMID 120273)
(Catholic / Christian) High School, Diploma, Bachelor Degree, Master Degree, PHD, (Single / Divorced / Annulled )
+1 647 709 1761
+1 647 709 1536
+1 416 477 2259
+1 416 477 6854
GTA Square - 5215
Finch Ave. E. Unit 257
friendsmatrimonym@gmail.com
Mon to Fri
11AM to 6PM
Sat
12PM to 6PM
www.friendsmatrimony.com


வங்கிக் கடன்
தொல்லைகளிலிருந்து
விடுதலை
NEW LIFE FRESH START
PAST DUE NOTICE
Save
80%
கடன் 80% குறைய நடவடிக்கை
Reduce your debts upto 80%.
கடனுக்கு விடுவிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுதப்படும்
Stop all interest on your debts.
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, legal action & garnishments.
உங்கள் சொத்துகள் பாதுகாக்கப்படும்.
Protect all your assets (House, Car, RRSP, RESP).
மாதாந்த ரீதியில் அனைத்துக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்.
Make one monthly patment to all of your creditors.
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்.
GIve you solutions without bankruptcy.
Suren Sornalingam BBA
Post Graduate Diploma In Business Management
Federal Government Registered & Certified (BIA)
Insolvency Counsellor.
Member of Canadian Insolvency Foundation
Over 20 Years Experience
in the field of Insolvency
CRC CREDIT RECOVERY CANADA
10 Milner Business Court, Unit 300
Website: www.creditrecoverycanada.ca
Tel: 647-274-2832
Email: info@creditrecoverycanada.ca

# இந்தியாவை உலுக்கும் உதயநிதியின் "சனாதன தர்ம" புயல்



தமிழகத்தை ஆளும் திமுகவின் இளவரசர் உதயநிதி ஸ்டாலின் ஒரு மாபெரும் அரசியல் புயலைக் கிளப்பியிருக்கிறார். அது, நாடெங்கும் சுழன்றடித்துக் கொண்டிருக்கிறது.

செப்டம்பர் 2ஆம் திகதி சென்னையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் சங்கம் நடத்திய சனாதன ஒழிப்பு மாநாட்டில் பேசிய உதயநிதி,

சனாதன தர்மம் என்பது கொசுக்கள், டெங்கு, மலேரியா போன்ற தீமை. அதை ஒழிக்க வேண்டும். வெறுமனே எதிர்த்தால் போதாது. சனாதனம் என்றால் என்ன? இந்தப் பெயரே சமஸ்கிருதத்தில் இருந்து தான் உண்டானது. சனாதானம் சமத்துவத்திற்கும் சமூகநீதிக்கும் எதிரானது. சனாதனம் என்பதன் பொருள் என்ன?

நிலையானது, மாற்ற முடியாதது, யாரும் கேள்வி கேட்க முடியாதது என்பது தான் இந்த சனாதானத்திற்கு அர்த்தம் என்று பேசியிருந்தார்.

அவர் இவ்வாறு பேசியவுடன் ஒரு பிரளயமே கிளம்பி விட்டது. இந்தியாவில் பெரும்பான்மையாக உள்ள இந்துக்களை அவமதித்ததாக பாஜகவும் அதன் கூட்டணிக் கட்சிகளும் அவர் மீது குற்றம் சாட்டினர். உள்துறை அமைச்சர் அமித் ஷா, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்ட மோடி அரசின் உயர்மட்ட அமைச்சர்களும் உதயநிதியைக் கடுமையாகச் சாடினர்.

சனாதன தர்மத்தைக் கடைப்பிடிப்பவர்கள் என இந்துக்களின் இனப்படுகொலையை உதயநிதி தூண்டியதாகக் காவித் தலைவர்கள், இந்து அமைப்புகள் மற்றும் இந்து மடாதிபதிகள் பலர் குற்றம் சாட்டினர். பாஜக மூத்ததலைவர் யோகி ஆதித்யநாத் முதலமைச்சராக ஆட்சி செய்யும் உத்தரபிரதேசத்தில் மடாதிபதி ஒருவர், உதயநிதியின் தலைக்குப் பத்து கோடி ரூபாய் பரிசு அறிவிக்கும் அளவுக்குச் சென்றார்.

இந்துக்களின் இனப்படு கொலையைத் தூண்டியதாகவும், பெரும்பான்மை சமூகத்திற்கு எதிராக வெறுப்பைப் பரப்பியதாகவும் உதயநிதி மீது நடவடிக்கை எடுக்கக் கோரி பல காவிக் கட்சியினர் இந்திய உச்ச நீதிமன்றம் உட்பட, பல்வேறு நீதிமன்றங்களில் வழக்கு தொடர்ந்துள்ளனர். சமூக ஊடகங்களில் அதிகம் உலவி வரும் பாஜகவின் அமித் மாளவியா தனது ட்வீட்டில், சனாதன தர்மத்தைப் பின்பற்றும் 80சதவீதமான பாரதீயர்களின் இனஅழிப்புக்கு அழைப்பு விடுத்ததாக உதயநிதி மீது குற்றம் சாட்டியுள்ளார்.

எதிரணி கூட்டணியின் ஒரு முக்கிய அங்கமாகவும் காங்கிரஸின் நீண்ட நாள் நட்பிலும் இருக்கும் திமுகவைச் சுட்டிக் காட்டிய அவர், மும்பைக் கூட்டத்தில் இதற்குத் தான் (இன அழிப்பு) ஒப்புக் கொள்ளப்பட்டதா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளார். அண்மையில், பாஜகவின் எதிர்க்கட்சித் தலைவர்கள் மும்பையில் நடத்திய கூட்டத்தை அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சர்ச்சை குறித்து இதுவரை காங்கிரஸ் மௌனம் காத்து வருகிறது. சனாதனத்தின் மீதான உதயநிதியின் இந்தத் தாக்குதல், வரும் மே மாத நாடாளுமன்றத் தேர்தலில் தனக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என்று ஒரு வேளை அக்கட்சி உணர்ந்திருக்கலாம். காங்கிரஸ் கூட்டாளி திமுக, இந்து ஒரு டெங்கு அதை ஒழிக்க வேண்டும் என்று கூறுகிறது என்ற பிரச்சாரத்தை வட இந்தியாவில் பாஜக ஆதரவாளர்கள் தொடங்கி விட்டார்கள். இது, காங்கிரஸ் தலைமையைக் கதிகலங்கச் செய்திருக்கிறது. பிரதமர் நரேந்திர மோடியும் உதயநிதியின் சனாதன ஒழிப்புக் கருத்துக்களை விமர்சித்ததுடன் செப்டம்பர் 9-10 திகதிகளில் டெல்லியில் நடக்கும் ஜி-20 உச்சி மாநாட்டைப் பற்றி விவாதிக்கக் கூட்டப்பட்டதன் அமைச்சரவைக் கூட்டத்தில், உதயநிதியின் கருத்துக்கு சரியான பதிலை அளிக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்துள்ளார். சாதிப் பாகுபாடு போன்ற சனாதன தர்மத்தின் எதிர்மறை அம்சங்களின் அடிப்படையில், குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒரு பழங்குடியினப் பெண் என்ற காரணத்திற்காகத் தான் புதிதாகக் கட்டப்பட்ட நாடாளுமன்றக் கட்டடத்தைத் திறந்து வைப்பதற்கு அவரை அழைக்கவில்லையோ என்று திமுகவினர் கேள்வி எழுப்பியதையடுத்து, மோடி கலக்கமடைந்ததாகத் தெரிகிறது.

முதல்வர் மு. க.ஸ்டாலின் தனது மகன் உதயநிதிக்கு ஆதரவாகப் பேசியதுடன், உண்மையில் அவர் என்ன பேசினார் என்பது பற்றிய முழு விவரம் தெரியாமல் பிரதமர் மோடி பேசுவதாகவும் குற்றம் சாட்டினார்..

மணிப்பூர் பற்றியோ, சி ஏ ஜி அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள 7.5 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முறைகேடுகள் பற்றியோ பிரதமரும் ஒன்றிய அமைச்சர்களும் இன்னும் வாயே திறக்கவில்லை. ஆனால், சனாதனத்தைப் பற்றிப் பேசியவுடன் ஒன்றிய அமைச்சரவையே கூடி இருக்கிறது என்றால் இவர்கள் தான் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங் குடியின மக்களைக் காப்பாற்றப் போகிறார்களா? பெண்ணினத்தை முன்னேற்றப் போகிறார்களா? என்று முதல்வர் ஸ்டாலின் தன் காட்டமான அறிக்கையில் கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து தன் கருத்தை விவரித்த அவர், அதனால் தான் நேற்று அண்ணல் அம்பேத்கரின் பேரன் பிரகாஷ் அம்பேத்கர் கூட, தீண்டாமையை ஆதரிக்கும் சனாதனத்தை எப்படி நாம் ஏற்றுக்கொள்ள முடியும்? என்று கேட்டுள்ளார். இதற்குப் பிரதமரின் பதில்என்ன? என்று வினா எழுப்பியுள்ளார்.

பாஜகவுக்கு எதிரான கட்சிகள் அனைத்தும் சேர்ந்து உருவாக்கியுள்ள I.N.D.I.A கூட்டணியானது, பிரதமரை நிலைதடுமாற வைத்து விட்டது. 'ஒரே நாடு - ஒரே தேர்தல்' என ஏதோ பூச்சாண்டி காட்டி வருகிறார். நாடாளுமன்றத் தேர்தலைப் பார்த்துப் பயந்திருப்பது பாஜகதானே தவிர, I.N.D.I.A கூட்டணி அல்ல என்று ஸ்டாலின் கூறினார். பாஜகவுக்கு இப்போது வந்திருப்பது சனாதனத்தின் மீதான ஈடுபாடு அல்ல. I.N.D.I.A கூட்டணிக்குள் எப்படியாவது விரிசலை ஏற்படுத்தி விட முடியாதா என்ற அரசியல் கணக்கு. இதைப் புரிந்து கொள்ளப் பெரிய அரசியல் வித்தகம் எதுவும் தேவையில்லை. மேலும், ஆர் எஸ் எஸ் அமைப்பின் தலைவர் மோகன் பாகவத் கூட 'சமூக அமைப்பில் சக மனிதர்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டோம். அவர்களைப் பற்றிக் கவலைப்படவில்லை. மேலும், அது 2000 ஆண்டுகளாகத் தொடர்கிறது. நாம் அவர்களுக்குச் சமத்துவத்தை வழங்கும் வரை, இட ஒதுக்கீடு உள்ளிட்ட சிறப்புத் தீர்வுகள் இருக்க வேண்டும்' என்று பேசியிருக்கிறார். எனவே, இதற்கு மேலும் உதயநிதி பேசியது தொடர்பாக பாஜகவினருக்கு விளக்கம் வேண்டும் என்றால், மோகன் பாகவத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளட்டும். பழுத்த அனுபவமும், நாட்டின் மீது மாறாப் பற்றும் கொண்ட தலைவர்கள், அரசியலுக்காக மத உணர்வைக் கிளறி ஆதாயம் தேடும் அற்ப அரசியலைப் புறந்தள்ளி, பாஜகவிடமிருந்து நாட்டைக் காக்கும் கடமையை மேலும் வேகப்படுத்துவார்கள். என்று ஸ்டாலின் எச்சரித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் அதனுடைய கொள்கை, கோட்பாடுகள் என்பவை வெளிப்படையானவை. ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்றும் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்றும் இயங்கும் இயக்கம். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடி மக்களுக்கும் சிறுபான்மைச் சமூகத்துக்கும் பெண்ணினத்துக்கும் ஏழை எளிய மக்களுக்கும் எல்லாம் கிடைக்கவேண்டும் என்பதற்காகத் தோற்றுவிக்கப்பட்டு, அவர்களது உயர்வுக்காகக் குரல் கொடுத்து வரும் இயக்கம். அதனால் தான் ஆறாவது முறையாக ஆட்சியைக் கொடுத்து அலங்கரித்துள்ளார்கள் தமிழ்நாட்டு மக்கள். அனைத்து இந்துக்களும் அர்ச்சகர் ஆக முடியும் என்பதை நிறைவேற்றிக் காட்டி இருக்கிறோம். இந்தியாவிலேயே முதலில் பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை கொடுத்து, சனாதனம் மறுத்ததைச் சாத்தியம் ஆக்கியது திராவிட முன்னேற்றக் கழகம். எந்தத் தனி மனித உணர்வுக்கும் மதிப்பளித்து, அவர்களைச் சுயமரியாதை உள்ள மனிதர்களாக ஆக்கி வரும் இயக்கம் திராவிடமுன்னேற்றக் கழகம். என்றும் அவர் கூறினார்.

இனம், மொழி, சாதி வேறுபாடு இன்றி அனைவரும் ஒருதாய் மக்களாக வாழும் அமைதிமிகு வாழ்க்கையை உறுதி செய்து வரும் இயக்கம். கொள்கையை அறிவுப்பிரச்சாரம் செய்தவர்களே தவிர, எந்தக் காலத்திலும் வன்முறையில் நம்பிக்கை இல்லாத இயக்கம். அத்தகைய பழம் பெரியக்கத்தின் மீது களங்கம் கற்பிப்பதன் மூலமாக அரசியல் செய்ய நினைத்தால் அந்தப் புதை குழியில், பாஜக தான் மூழ்கும் என்று தன் பதிலடியை முடித்தார் முதல்வர் ஸ்டாலின். ஸ்டாலின் மற்றும் அவரது மகன் உதயநிதிக்கு எதிராக பாஜகவின் தமிழகத் தலைவர் அண்ணாமலை சமூக வலைதளங்களில் கடுமையாகச் சாடியுள்ளார்.

சனாதன தர்மம் திராவிடத்தின் சமூக நீதிக்கு எதிரானது என்ற பொய்யைக் கூறி அவர்கள் இருவரும் வஞ்சகமாக ஏமாற்றி வருவதாக அவர் குற்றம் சாட்டினார். சனாதன தர்மம், உண்மையில் பல்லாயிரம் ஆண்டுகளாகக் கடைபிடிக்கப்பட்டு வரும் ஒரு வாழ்க்கை முறை என்றும், இந்து மதம், கிறிஸ்தவம், இஸ்லாம் போன்ற அனைத்து மதங்களிலும் உள்ள அனைத்து நல்ல விஷயங்களை உள்ளடக்கியதாகவும் உள்ளது, என்றும் உதயநிதி கூறியது போல் அதை ஒழிக்க முடியாது என்றும் அண்ணாமலை கூறினார்.

திமுகவில் எப்போதும் செல்வாக்கு மிக்க உயர்சாதி பிராமணரல்லாதார் ஆதிக்கம் செலுத்துவதாகவும், அதே நேரத்தில் அதன் தலைவர்கள் தலித்துகள் மற்றும் பிற ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் நலனுக்காகச் செயல்படுவதாகப் பாவனை செய்வதாகவும் அவர் குற்றம் சாட்டினார். நரேந்திர மோடியின் 79 பேர் கொண்ட மத்திய அமைச்சரவையில் 20 அமைச்சர்கள் தலித் அல்லது பழங்குடியினர், 11 பெண்கள் மற்றும் 5 சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்கள் (முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள்) உள்ளனர் என்றும், மொத்தம் 35 அமைச்சர்கள் கொண்ட ஸ்டாலின் அமைச்சரவையில் மூன்று தலித்துகள் மற்றும் இரண்டு பெண்கள் மட்டுமே உள்ளனர் என்றும் அவர் புள்ளிவிவரங்களை வெளியிட்டார்.

நீங்கள்அவர்களுக்கு (தலித்துகளுக்கு) அரசியல் உரிமைகளையும் அதிகாரத்தையும் வழங்கவில்லை அப்படியென்றால், ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது பற்றி நீங்கள் என்ன பேசுகிறீர்கள்? நீங்கள் பிரசங்கம் செய்வதை உண்மையில் நடைமுறைப் படுத்துவதில்லை என்றார் அவர். அண்ணாமலை 'எக்ஸ்' (ட்விட்டர்) தளத்தில் வெளியிட்ட காணொலி தமிழில் அல்லாமல் ஆங்கிலத்தில் உள்ளது, ஆனால் அவரோ ஸ்டாலினிடம் உரையாற்றுவதாகக் கூறினார். ஒருவேளை, அவர் உண்மையில் தனது செய்தியை டெல்லியில் உள்ள பாஜக மேலிடத்துக்குச் சென்றடையச் செய்ய முயன்றிருக்கலாம்.

இந்த சனாதன தர்ம சர்ச்சை இந்தியாவில் தலைதூக்குவது பற்றியும், மோடி மற்றும் அவரது அரசாங்கம் மீது ஸ்டாலினின் கடுமையான தாக்குதலைப் பற்றியும் நான் விரிவாக இங்கு விவரித்துள்ளதற்குக் காரணம், இலங்கையின் சமூக-அரசியல் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு பிரச்சனையை முன்னிலைப்படுத்துவதற்காக மட்டுமல்ல, தலைமுறை தலைமுறையாக நம் சமூகத்தை ஆட்டிப் படைத்து வரும் சாதிப் பாகுபாடு போன்ற மிகவும் உணர்ச்சிகரமான பிரச்சனையில் டெல்லியில் உள்ள வலிமை மிக்க காவிப் பேரரசுக்கு எதிராக தென் மாநிலமான தமிழ்நாடு எவ்வாறு உறுதியாக நிற்கிறது என்பதைக்காட்டுவதற்காகவும் தான். இந்த காட்டுத் தீ இன்னும் சில மாதங்களுக்கு, குறைந்த பட்சம் அடுத்த ஆண்டு மே மாதம் நாடாளுமன்றத் தேர்தல் வரை தொடர்ந்து அனல் அடிக்கும். அதே சமயம், எதிர்க் கட்சி கூட்டணியான I.N.D.I.A வலுவடைவதற்கு முன் டிசம்பரில் தேர்தலை முன்னெடுத்துச் செல்ல மோடி திட்டமிட்டுள்ளார் என்ற செய்திகள் தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கின்றன.

உ
அருள்மிகு



# ஸ்ரீ சொர்ணாகர்ஷண ஞான வைரவர் கோவில்

## அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

### ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் அடியார்களே!

நிகழும் மங்கள கரமான சோபகிருது வருடம் புரட்டாதி மாதம், 6 ஆம் நாள் (22-09-2023) வெள்ளிக்கிழமை முதலாக (02-10-2023) திங்கள்கிழமை மஹாபரணி நட்சத்திரம் வரை 11 தினங்களுக்கு காலையும் மாலையும் அலங்கார உற்சவம் சிறப்பாக நடைபெற ஸ்ரீ ஞான வைரவர்ப் பெருமானின் திருவருள் கைகூடியுள்ளது. அடியார்கள் அனைவரும் வந்து தரிசித்து அருள் பெறுமாறு வேண்டுகிறோம்.

பரமனை மதித்திடாப் பங்க யாசனன் ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியுமகந்தையுங் கொண்டு தண்டமுன் புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

### 21/09/2023

காலை 7.00: ஸ்ரீ சிந்தாமணி விநாயகருக்கு நவகலச அபிஷேகம்.
மாலை 5.00: புண்யாகவாசனம், கிராமசாந்தி, பிரவேசபலி, வாஸ்துசாந்தி.

### திருவிழா ஆரம்பம்

SEP22 வெள்ளி காலை 8:30 a.m. நவகலச 108 சங்காபிஷேகத்தோடு திருவிழா ஆரம்பம்

**சப்பறம்**
SEPT 30 சனி
மாலை 8:00 p.m.

**தேர்**
OCT 01 ஞாயிறு
காலை 11:00 a.m.

### திருவிழா பூர்த்தி

மஹாபரணி தீர்த்தம்: OCT 02 திங்கள் காலை 11:00 a.m.
மஹாபரணி மடை: OCT 02 திங்கள் மாலை 8:00 p.m.

**பூங்காவனம்**
OCT 03 செவ்வாய்
மாலை 6:00 p.m.

**நாகதம்பிரான் மடை**
OCT 04 புதன்
மாலை 8:00 p.m

**திருவிழா நாட்களில் பூஜை நேரங்கள்**

காலை: 7:30 உதயபூஜை. 8:30 நவகலச அபிசேகம். 9:30 மூலவர்பூசை.
10:00 வசந்தமண்டப பூசை, சுவாமி வீதிவலம்வருதல். 12:00 உச்சிகால பூஜை.
மாலை: 5:00 சாயரட்சை பூஜை. 6:00 நவகலச அபிசேகம். 7:00 மூலவர்பூசை.
7:30 வசந்தமண்டப பூசை, சுவாமி வீதிவலம்வருதல். 9:00 சயன பூஜை.


திருவிழா நாட்களில் அடியார்கள் அனைவர்க்கும் இறைவனின் திருவருட்பிரசாதமும் வழங்கப்படும். அடியார்கள் திருவிழா நாட்களில் அபிசேகத்திற்குரிய பால், தயிர், இளநீர், பழங்கள், பூக்கள், அன்னதான பொருட்களை கொடுத்து திருவிழா பூஜைகள், அபிசேகங்கள், உற்சவங்களில் குடும்பத்தோடு கலந்து வைரவப்பெருமானின் திருவருள் பெற்று வளம் பெறுக.
வைரவர் வழிபாடு கைமேற்பலன்.

கூடுதல் விபரங்களுக்கு - தொலைபேசி: 647-351-6757 | 416-520-2056 | வலைத்தளம்: www.gnanabhairavar.ca
450 Taunton Road East, Oshawa, Ontario, L1K 1A8


இங்கனம் சிவப்பணியில் ஆலய நிர்வாகிகள்.

EELANADU 15 Sep 2023 ஈழநாடு


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! சுப நிகழ்ச்சிகளில் இருந்து வந்த தடை நீங்கும். மனசோர்வு அகலும். மன அமைதி பாதிக்கும்படியான சூழ்நிலை ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் அதிக லாபம் பெறுவர். அலுவலக வேலைகளால் அலைச்சல் உண்டாகும். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்களால் வீண் டென்ஷன் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி செயல்படுவது நன்மை தரும்.





ரிஸபராசி அன்பர்களே! மனத் துணிவு உண்டாகும். எந்த ஒரு காரியத்தையும் துணிவுடன் செய்து அதிக நன்மை அடைவீர்கள். போட்டி பந்தயங்களில் ஈடுபடுவதை தவிர்ப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். உறவினர்களுடன் பேசும் போது நிதானத்தை கடைப் பிடிப்பது நல்லது. புரட்டாதி சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு தீபம் ஏற்றி வழிபடவும்.





மிதுனராசி அன்பர்களே! முன்பு தடைபட்ட காரியங்கள் எவ்வித இடையூறுமின்றி நடந்து முடியும். வெளியூர் பயணங்கள் உண்டாகும், அதனால் நன்மையும் ஏற்படும். வழக்குகளில் இருந்து வந்த சோதனைகள் மாறும். சொத்து சம்பந்தமான விஷயங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். நண்பர்கள் பல விதங்களிலும் ஆதரவாக இருப்பர். தொழில் வியாபாரத்தில் இருந்த இடையூறுகள் குறையும். கணவன் மனைவிக்கிடையே மகிழ்ச்சி நீடிக்கும்.





கடகராசி அன்பர்களே! நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் சாதகமாக நடந்து முடியும்.தொழில் வியாபாரத்தில் கூடுதல் அலைச்சல் இருந்தாலும் முடிவில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். கணவன், மனைவி பிரச்னைகளை நிதானமாக பேசுவது நல்லது.





சிம்மராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர்.




கன்னிராசி அன்பர்களே! எதிர்பாராத நல்ல திருப்பம் உண்டாகும். திட்டமிட்ட காரியம் திட்டமிட்டபடியே நடக்கும். வழக்குகளில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். தொழில் வியாபாரத்தில் மேன்மை உண்டாகும். வியாபார போட்டிகளில் சாதகமான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். நிலுவையில் உள்ள தொகை வந்து சேரும். கணவன், மனைவி உறவு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.





துலாம்ராசி அன்பர்களே! நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் ஏற்படும் பணதேவையை சரிகட்ட நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான வேலைகளில் அலைச்சல் இருக்கும். மேலிடத்திலிருந்து கனிவான உபசரிப்பு கிடைக்கும். குடும்பத்தில் அனுகூலமான பலன்கள் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே பழைய விஷயங்களை பேசாமல் இருப்பதன் மூலம் ஒற்றுமை இருக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! எதிர்ப்புகள் நீங்கி எதிலும் உற்சாகம் உண்டாகும். மனமகிழ்ச்சிக்காக பணம் செலவு செய்ய தயங்க மாட்டீர்கள். நண்பர்கள் சேர்க்கையும் அவர்களால் உதவியும் கிடைக்கும். வாக்கு வன்மை அதிகரிக்கும். வியாபாரம் தொடர்பான வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். உத்யோகத்தில் பொறுப்புகள் கூடும். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வும் கிடைக்கக்கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.







தனுசுராசி அன்பர்களே! எந்த ஒரு காரியம் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுப்பீர்கள். வெளியூரில் இருந்து வரும் கடிதங்கள் மூலம் மகிழ்ச்சி ஏற்படும். தொழில், வியாபாரத்தில் புதிய உத்வேகம் பிறக்கும். தொழில் தொடர்பான விவகாரங்களில் இருந்து வந்த வீண் இடையூறுகள் ஏற்பட்டு நீங்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகள் மூலம் அனுகூலம் ஏற்படும். புதிய வேலையில் சேர்ந்தவர்களுக்கு பதவி உயர்வு வரும்.




மகரராசி அன்பர்களே! எடுத்த காரியம் கைகூடும். கடன் விவகாரங்களில் இருந்து வந்த தேக்க நிலை மாறும். வழக்குகளில் இருந்து வந்த தொய்வு நீங்கும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். பயணங்கள் மூலம் லாபம் கிடைக்கலாம். மேலதிகாரிகளால் உத்யோகஸ்தர்களுக்கு நன்மை உண்டாகும். சக ஊழியர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். வாழ்க்கை துணை மூலம் ஆதாயம் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எதிர்பாராத சுபச்செலவுகள் ஏற்படும். எதிர்ப்புகள் நீங்கும். கவலையை விட்டு விட்டு தொழில் வியாபாரத்தில் கவனம் செலுத்துவது நல்லது. உத்யோகஸ்தர்களுக்கு வெளியூர் மாற்றங்கள் உண்டாகலாம். சக ஊழியர்களிடம் பேசும் போது கோபப்படாமல் இருப்பது நன்மை தரும். குடும்ப உறுப்பினர்களிடம் இருந்த மனத்தாங்கல் நீங்கி மகிழ்ச்சியும், சகஜ நிலையும் காணப்படும்.




மீனராசி அன்பர்களே! வரவை போலவே செலவும் இருக்கும். பயணங்களால் அலைச்சலும், எதிர்பாராத பொருள் இழப்பும் இருக்கும். எனவே கவனமாக இருப்பது நல்லது. திடீர் கவலை ஏற்பட்டு நீங்கும். கூட்டு தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பர். வியாபாரம் தொடர்பான முயற்சி வீண் முயற்சியாக இருந்தாலும் பின்னாளில் அதற்கான பலன் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு கூடுதல் வேலை சுமை இருக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

# சனல் 4 வெளிப்படுத்தல்:-

(18ம் பக்கத் தொடர்ச்சி) போது தான், புதுடெல்லியில் தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் பயிற்சி நெறியில் ஈடுபட்டிருந்ததாகவும், சுரேஷ்சாலே கூறியிருக்கிறார். மலேசியாவில் இருந்த தாம் இலங்கையில் எவ்வாறு சஹ்ரான் குழுவினரைச் சந்திக்க முடியும் என்று அவர் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

சுரேஸ் சாலே ஒரு புலனாய்வு அமைப்பின் தலைவர். அவரிடம் ஒரே ஒரு கடவுச்சீட்டு மாத்திரம் இருந்தது என்று நம்ப முடியாது. கே.பி எனப்படும், செல்வராசா பத்மநாதனை மலேசியாவில் கைது செய்து இரகசியமாக கொழும்புக்கு கொண்டு வந்து சேர்த்த அவரால் இரகசியமாக மலேசியாவில் இருந்து இலங்கைக்கு வந்து சென்றிருக்க முடியாதா?

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக உள்ள அஜித் டோவல், ஐ.பி எனப்படும் புலனாய்வு அமைப்பில் பணியாற்றிய போது, 7 ஆண்டுகள் பாகிஸ்தானில் இரகசியமாக உளவாளியாக பணியாற்றியிருந்தார்.

அங்கு அவர் முஸ்லிமாகவே வாழ்ந்திருந்தார். பள்ளிவாசல் ஒன்றுக்குச் சென்றிருந்த போது தான் அவரை, முஸ்லிம் இல்லை இந்து என்று ஒருவர் அடையாளம் கண்டார். சிறு வயதில் காது குத்திய அடையாளத்தை வைத்தே அந்த பாகிஸ்தானியர் அவரை அடையாளம் கண்டார். ஆனால் அவரும் முஸ்லிமாக வாழ்ந்து வந்த ஒரு ஹிந்து என்பதால் அப்போது டோவல் தப்பித்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் அமெரிக்காவின் புலனாய்வு அமைப்பான சி.ஐ.ஏ.யின் பணிப்பாளர் வில்லியம் பேர்ன்ஸ் இலங்கைக்கு இரகசியமாக வந்து சென்றார். அரசாங்கம் அதனை இன்று வரை வெளிப்படுத்தவில்லை. அதற்காக அவர் இலங்கைக்கு வரவில்லை என்று கூற முடியாது.

புலனாய்வு தலைவர்கள் பல கடவுச்சீட்டுகளை பல பெயர்களில் வைத்திருப்பதும், இரகசியமாக அவர்கள் நாடுகள், இடங்களுக்குச் சென்று வருவதும் வழமை. வேறு பல நாடுகளின் கடவுச்சீட்டுகளையும் கூட அவர்கள் வைத்திருப்பார்கள். அரசாங்க நலனைக் கருத்தில் கொண்டு அதற்கு அனுமதிகளும் வழங்கப்படும். எனவே 2018ஆம் ஆண்டு முழுவதும் மலேசியாவில் தான் இருந்தேன் என்று மேஜர் ஜெனரல் சுரேஷ் சாலே கூறுவதை மட்டும் வைத்துக் கொண்டு தீர்மானங்களை எடுக்க முடியாது. இவ்வாறான ஒரு மறுப்பு வெளியிடப்படும் என்பதை கவனத்தில் கொள்ளாமல் முட்டாள்தனமாக ஆவணப்படத்தை சனல் 4 வெளியிட்டிருக்காது.

சுரேஷ் சாலே விவகாரத்தில் சிலவேளைகளில் சனல் 4 அலைவரிசையிடம் மேலதிக ஆதாரங்கள் இருக்கக் கூடும். எவ்வாறாயினும், புலனாய்வுப் புலியாக அறியப்பட்ட சுரேஷ் சாலே, இப்போது, தனக்கெதிரான சாட்சியங்கள், வலைப்பின்னல்களை உடைத்தெறிவதிலேயே இனி அதிக நேரத்தைச் செலவிட நேரிடும்.

அதேவேளை, அவர் மலேசியாவில் இருந்து கொண்டும், இந்தியாவில் இருந்து கொண்டும், ஒரு பயங்கரவாத தாக்குதலுக்கான சதித் திட்டத்துக்கு துணை போயிருந்தால், அதனை அந்த நாடுகள் மாத்திரமன்றி, ஏனைய நாடுகளும் சாதாரணமாக எடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பில்லை.

# தமிழன்டா! தமிழன்டா!

(16ம் பக்கத் தொடர்ச்சி) உரிமைகள், மரணதண்டனை, பெயரளவிலான பல் கட்சி ஜனநாயகம் என்பன குறித்து சர்வதேச மட்டத்தில் சிங்கப்பூர் பெரும் விமர்சனங்களைப் சந்தித்து வருகின்றது. சிங்கப்பூ ரின் பொருளாதார அபிவிருத்தி மக்களுக்கு சரியாக பகிர்ந்தளிக்கப்படாத கொள்கை சமூக நீதியற்றது என்று விமர்சிக்கப்படுகிறது. இது பொதுவாக முலாளித்துவ பொருளாதாரம் சார்ந்த குறைபாடுகளை வெளிப்படுத்துவதாக உள்ளது.

இன்னும் ஒரு விடயம் இங்கு சுட்டிக் காட்ட வேண்டியதாகும். கருத்துக்கணிப்பு ஒன்றில் அடுத்த பிரதமராக மக்கள் யாரை விரும்புகிறார்கள் என்று கேட்கப் பட்டது. அதற்கு பெரும்பான்மையான மக்கள் தாங்கள் தர்மன் கனகரட்ணத்தை விரும்புவதாக தெரிவித்தனர்.

ஆனால் தற்போதைய பிரதமர் சீன மக்கள் பெரும்பான்மையாக உள்ள சிங்கப்பூரில் அது முறையல்ல. சீனர் ஒருவரே பிரதமராக வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். பிரதமரின் இந்த கருத்து பெரும் கண்டனத்தை பெற்றது. ஆனால் தர்மன் கனகரெட்ணம் அதை பொருட்படுத்தாது ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தை ஏற்றுக்கொண்டார். இது சிங்கப்பூரில் அரசியல் மட்டத்தில் இனவாதம் முளைவிடத் தொடங்கி இருக்கிறது என்பதை காட்டுகிறது. எதிர்காலமே இந்தப் போக்கை நிர்ணயிக்கும்.

இந்த நிலையில்.சிங்கப்பூர் அரசியலை தமிழண்டா அடையாள அரசியல் ஆக்குவதும், சிங்கப்பூரின் புறம் காலுக்கும் ஒப்பிட முடியாத இலங்கை சமூக, பொருளாதார வங்குரோத்து அரசியலை வைத்துக்கொண்டு சிங்கப்பூராக்குவோம் என்பதும் அம்மணமான வாய்ச்சொல் அரசியலே. நன்றி:- அரங்கம் இணையம்

# இலங்கை அரசியல் இனவாதத்தில்...

(17ம் பக்கத் தொடர்ச்சி) அந்த யுகத்தின் பிரதிநிதியாகவே சிந்திக்கிறார்கள். அதனால் தான் அவர்களால் இந்த யுகத்தின் மனிதர்களாக முடியவில்லை. கோட்டும் சூட்டும் போட்டு (ரை) கழுத்துப்பட்டியும் கட்டிவிட்டால் அவர்கள் இந்த யுகத்தின் பிரதிநிதிகள் ஆகி விடுவார்கள் என்றில்லை. என்பதால் தான் இலங்கையர்களாகிய நாங்கள் இந்த உலகத்தில் மிகப் பின்தங்கியவர்களாக உள்ளோம். இலங்கையை விட்டு எங்காவது தப்பியோடினால் நல்லது என்று எண்ணுகின்றவர்களாக இருக்கிறோம். ஆனால் அங்கே சென்றதும் இங்குள்ள அரசியற் கட்சிகளுக்கு முண்டு கொடுக்கும் ஆட்களாகவும் மாறி விடுகிறோம். அடிப்படையில் நாமும் இனவாதிகளாக இருப்பதே இதற்குக் காரணம். நம்மை அறியாமலே நமக்குள் இனவாதம் செயற்படுகிறது. என்பதால்தான் நம்மால் பிறரை நம்பவும் மதிக்கவும் அவர்களோடு இணைந்து செயற்படவும் முடியாதிருக்கிறது.

ஆகவே இன்னும் நூறு ஆண்டுகளுக்கு இதே ஐ.தே.கவும் இதே சு.கவும் இதே ஜே.வி.பியும் இதே பெரமுனவும் இதே தமிழரசுக் கட்சியும் இதே முஸ்லிம் காங்கிரசும் இதே மலையகக் கட்சிகளும் இதே அரசியலை இதே வழிமுறையில் தயக்கமின்றித் தொடரப் போகின்றன. வாழ்த்துகள்.

(7ம் பக்கத் தொடர்ச்சி) வெளியேற்றத்தை ஊக்குவிக்கின்றது. அடைந்தால் மகாதேவி இல்லையேல் மரணதேவி என்றவாறான அரசியல் சுலோகங்களும இறுதியில் மக்களை வெளியேற்றுவதற்கே பயன்படுகின்றது.

இது நீண்டகாலத்தில் தமிழ் மக்களுக்கான நிலம் என்று ஒன்றை அடையாளப்படுத்த முடியாத நிலைமையை ஏற்படுத்தும். இறுதியில், வறுமைக்கோட்டின் கீழுள்ள மக்களே எஞ்சுவர். இதனை விளங்கிக் கொள்ள முடியாதவர்களாகவா தமிழ் தேசியர்கள் இருக்கின்றனர் அல்லது விளங்கிக் கொண்டே சிதைக்கும் பணியை செய்கின்றனரா? நன்றி:- யாழ்.ஈழநாடு

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து
தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள்
பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம்.
அனுபவத்துடன் கூடிய அன்பான
சேவையை வழங்குகின்றோம்.

*At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

*Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com








# நீதி, சமத்துவம், சமாதானத்திற்கான தமிழ்மக்களின் அபிலாசைகளை
## இலங்கை பூர்த்தி செய்ய வேண்டுமென இந்தியா ஐ.நா.மனிதஉரிமை பேரவையில் தெரிவிப்பு

நீதி, சமத்துவம் மற்றும் சமாதானத்துக்கான தமிழ்மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இந்தியா வலியுறுத்தியிருக்கும் அதேவேளை இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும், அவற்றை மேம்படுத்துவதிலும் 51-1 தீர்மானம் நேர்மறையானதொரு வகிபாகத்தைக் கொண்டிருக்கவில்லை என சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. அன்றைய தினம் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் மனித உரிமைகள் பேரவையின் பதில் உயர்ஸ்தானிகர் நாடா அல்-நஷீஃப்பின் உரையும், அதனைத் தொடர்ந்து உறுப்புநாடுகளின் பிரதிநிதிகளின் உரையும் இடம்பெற்றது.

அதன்படி இந்தியா சார்பில் பேரவையில் உரையாற்றிய மணி பாண்டேவினால் சுட்டிக்காட்டப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:

இலங்கையின் அயல்நாடு மற்றும் நெருங்கிய நட்புநாடு என்ற ரீதியில் கடந்த 2009 ஆம் ஆண்டு தொடக்கம் நிவாரணம், புனர்வாழ்வளித்தல், மீள்குடியேற்றம் மற்றும் மீளக்கட்டியெழுப்பல் ஆகியவற்றை முன்னிறுத்திய இலங்கையின் முயற்சிகளுக்கு இந்தியா தொடர்ச்சியான ஆதரவை வழங்கி வந்திருக்கின்றது. அது மாத்திரமன்றி இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியை உரியவாறு கையாள்வதற்கு சுமார் 4 பில்லியன் டொலருக்கும் மேற்பட்ட பெறுமதியுடைய உதவிகளை இந்தியா வழங்கியிருக்கின்றது.



இந்தியா எப்போதும் இரண்டு அடிப்படைக் கொள்கைகளின் பிரகாரமே செயற்பட்டுவருகின்றது. நீதி, சமத்துவம், கௌரவம், சமாதானத்துக்கான தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு ஆதரவளித்தல் மற்றும் இலங்கையின் ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகியவையே அவையாகும்.

இவ்வாறானதொரு பின்னணியில் நீதி, சமத்துவம் மற்றும் சமாதானத்துக்கான தமிழ்மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்யும் என்றும் அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தல் மற்றும் மாகாணசபைத்தேர்தல்களை நடாத்துதல் ஆகிய கடப்பாடுகளை நிறைவேற்றும் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

தமது கடப்பாடுகளை நிறைவேற்றுவது குறித்து இலங்கை அரசாங்கம் வழங்கியிருக்கும் உத்தரவாதத்தைக் கவனத்திற்கொள்ளும் அதேவேளை, அடையப்பட்டுள்ள முன்னேற்றங்கள் போதுமானவையாக இல்லை. ஆகவே அனைத்துப் பிரஜைகளினதும் அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகளும் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையிலான தமது கடப்பாடுகளை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அர்த்தபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம் என்று அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை பேரவையில் உரையாற்றிய சீனப்பிரதிநிதி, நல்லிணக்கம், மீளக்கட்டியெழுப்பல், பயங்கரவாதத்தைத் தோற்கடித்தல், நலிவடைந்த நிலையிலுள்ள மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல், பொருளாதார மீட்சி மற்றும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் என்பன உள்ளடங்கலாக மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தலை முன்னிறுத்தி இலங்கை மேற்கொண்டு வரும் முயற்சிகளைப் பாராட்டுவதாகத் தெரிவித்தார். அதேவேளை, நாட்டின் இறையாண்மை, சுயாதீனத்தன்மை, சமூக உறுதிப்பாடு மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகிய விடயங்களில் தாம் இலங்கைக்கு வலுவான ஆதரவை வழங்குவதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51-1 தீர்மானமானது நியாயத்துவம் மற்றும் பக்கச்சார்பின்மை ஆகிய கோட்பாடுகளுக்கு ஏற்றவாறு அமையவில்லை என்பதுடன், சம்பந்தப்பட்ட நாட்டின் அனுமதியையும் பெறவில்லை. அது மாத்திரமன்றி இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும், அவற்றை மேம்படுத்துவதிலும் இத்தீர்மானம் நேர்மறையானதொரு வகிபாகத்தைக் கொண்டிருக்கவில்லை. ஐ.நா மனித உரிமைகள் பேரவையானது நாடுகளின் இறையாண்மை மற்றும் அரசியல் சுயாதீனத்தன்மை ஆகியவற்றுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும், மனித உரிமைகளின் மேம்பாட்டுக்காக அந்நாடுகளால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளை அங்கீகரிக்க வேண்டும் என்றும் கருதுகின்றோம்' என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் பொறுப்புக்கூறல் தொடர்பான திட்டத்தை இலங்கை அரசாங்கம் முற்றாக நிராகரிக்கின்றது என ஜெனீவா ஐநாவிற்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி சுபாசினி அருணதிலக தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறல் திட்டத்திற்கு வழிவகுத்த. இரண்டு 46.-1 -51-1 தீர்மானங்களையும் முற்றுமுழுதாக நிராகரித்துள்ளது என்பதை நான் ஆரம்பத்திலேயே தெரிவிக்க விரும்புகின்றேன். எழுத்து மூல அறிக்கைகளையும் முடிவுகளையும் பரிந்துரைகளையும் நாங்கள் நிராகரிக்கின்றோம்.

இது மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகள் பேரவைக்கு வழங்கிய ஆணைக்கு அப்பால் செல்கின்றது என்பதை வலியுறுத்த விரும்புகின்றது.